# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

## சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

## பன்னிரண்டாம் திருமுறை

### முதற் காண்டம்

# 4 மும்மையால் உலகாண்ட சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ------------------------------------------------

Periya puranam text

| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
|---|---|---|---|
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |
| 4 | mummaiyAl ulakANDa carukkam | மும்மையால் உலகாண்ட சருக்கம் | PDF |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |

| | | | |
|---|---|---|---|
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |


# 4 மும்மையால் உலகாண்ட சருக்கம்

15 மூர்த்தி நாயனார் புராணம்

1. சீர் மன்னும் செல்வக்குடி மல்கு சிறப்பின் ஓங்கும் 0968-1
கார் மன்னு சென்னிக் கதிர் மா மணி மாட வைப்பு 0968-2
நார் மன்னு சிந்தைப் பல நல் துறை மாந்தர் போற்றும் 0968-3
பார் மன்னு தொன்மைப் புகழ் பூண்டது பாண்டி நாடு 0968-4

2. சாயும் தளிர் வல்லி மருங்குல் நெடும் தடம் கண் 0969-1
வேயும் படு தோளியர் பண்படும் இன்சொல் செய்ய 0969-2
வாயும் படும் நீள் கரை மண் பொருந் தண் பொருந்தம் 0969-3
பாயும் கடலும் படும் நீர்மை பணித்த முத்தம் 0969-4

3. மொய் வைத்த வண்டின் செறி சூழல் முரன்ற சந்தின் 0970-1
மை வைத்த சோலை மலயம் தர வந்த மந்த 0970-2
மெய் வைத்த காலும் தரும் ஞாலம் அளந்த மேன்மைத் 0970-3
தெய்வத் தமிழும் தரும் செவ்வி மணம் செயிர் அம் 0970-4

4. சூழ் அமிதப் பங்கயமாக அத் தோட்டின் மேலாள் 0971-1
தாழ்வு இன்றி என்றும் தனி வாழ்வது அத் தையல் ஒப்பார் 0971-2
யாழின் மொழியில் குழல் இன்னிசையும் சுரும்பும் 0971-3
வாழும் நகரம் மதுராபுரி என்பது ஆகும் 0971-4

5. சால் பாய மும்மைத் தமிழ் தங்கிய அம் கண் மூதூர் 0972-1
நூல் பாய் இடத்தும் உள நோன் தலை மேதி பாயப் 0972-2
பால் பாய் முலை தோய் மதுப் பங்கயம் பாய எங்கும் 0972-3
சேல் பாய் தடத்தும் உள செய்யுள் மிக்கு ஏறு சங்கம் 0972-4

6. மந்தா நிலம் வந்து அசை பந்தரின் மாடம் முன்றில் 0973-1
பந்து ஆடிய மங்கையர் பங்கயச் செங்கை தாங்கும் 0973-2
சந்து ஆர் முலை மேலன தாழ் குழை வாள் முகப் பொன் 0973-3
செந்தாமரை மேலன நித்திலம் சேர்ந்த கோவை 0973-4

7. மும்மைப் புவனங்களின் மிக்கது அன்றே அம் மூதூர் 0974-1
மெய்ம்மைப் பொருளும் தமிழ் நூலின் விளங்கு வாய்மை 0974-2
செம்மைப் பொருளும் தருவார் திரு ஆல வாயில் 0974-3
எம்மைப் பவம் தீர்ப்பவர் சங்கம் இருந்தது என்றால் 0974-4

8. அப் பொன் பதி வாழ் வணிகக் குலத்து ஆன்ற தொன்மைச் 0975-1
செப்பத் தகு சீர்க் குடி செய் தவம் செய்ய வந்தார் 0975-2
எப் பற்றினையும் அறுத்து ஏறுகைத்து ஏறுவார் தாள் 0975-3
மெய்ப் பற்று எனப் பற்றி விடாத விருப்பின் மிக்கார் 0975-4

9. நாளும் பெரும் காதல் நயப்பு உறும் வேட்கை யாலே 0976-1
கேளும் துணையும் முதல் கேடு இல் பதங்கள் எல்லாம் 0976-2
ஆளும் பெருமான் அடித் தாமரை அல்லது இல்லார் 0976-3
மூளும் பெருக்கு அன்பு எனும் மூர்த்தியார் மூர்த்தியார்தாம் 0976-4

10. அந்திப் பிறை செம் கடை மேல் அணி ஆலவாயில் 0977-1
எந்தைக்கு அணி சந்தனக் காப்பு இடை என்றும் முட்டா 0977-2
அந்தச் செயலின் நிலை நின்று அடியார் உவப்பச் 0977-3
சிந்தைக்கு இனிது ஆய திருப்பணி செய்யும் நாளில் 0977-4

11. கானக் கடி சூழ் வடுகக் கரு நாடர் காவல் 0978-1
மானப் படை மன்னன் வலிந்து நிலம் கொள்வான் ஆய் 0978-2
யானைக் குதிரைக் கருவிப் படை வீரர் திண் தேர் 0978-3
சேனைக் கடலும் கொடு தென் திசை நோக்கி வந்தான் 0978-4

12. வந்து உற்ற பெரும் படை மண் புதையப் பரப்பிச் 0979-1
சந்தப் பொதியில் தமிழ் நாடு உடை மன்னன் வீரம் 0979-2
சிந்தச் செரு வென்று தன் ஆணை செலுத்தும் ஆற்றால் 0979-3
கந்தப் பொழில் சூழ் மதுரா புரி காவல் கொண்டான் 0979-4

13. வல் ஆண்மையின் வண் தமிழ் நாடு வளம் படுத்தி 0980-1
நில்லா நிலை ஒன்றிய இன்மையின் நீண்ட மேரு 0980-2
வில்லான் அடிமைத் திறம் மேவிய நீற்றின் சார்பு 0980-3
செல்லா தருகந்தர் திறத்தினில் சிந்தை தாழ்ந்தான் 0980-4

14. தாழும் சமண் கையர் தவத்தை மெய் என்று சார்ந்து 0981-1
வீழும் கொடியோன் அது அன்றியும் வெய்ய முன்னைச் 0981-2
சூழும் வினையால் அரவம் சுடர்த் திங்களோடும் 0981-3
வாழும் சடையான் அடியாரையும் வன்மை செய்வான் 0981-4

15. செக்கர்ச் சடையார் விடையார் திரு ஆல வாயுள் 0982-1
முக்கண் பரனார் திருத் தொண்டரை மூர்த்தியாரை 0982-2
மைக் கற்புரை நெஞ்சு உடை வஞ்சகன் வெஞ்ச மண் போர் 0982-3

எக்கர்க்கு உடனாக இகழ்தன செய்ய எண்ணி  0982-4

16. அந்தம் இலவாம் இறை செய்யவும் அன்பனார் தாம்  0983-1
முந்தை தம் முறைமைப் பணி முட்டலர் செய்து வந்தார்  0983-2
தம் தம் பெருமைக்கு அளவாகிய சார்பில் நிற்கும்  0983-3
எம் தம் பெரு மக்களை யாவர் தடுக்க வல்லார்  0983-4

17. எள்ளும் செயல் வன்மைகள் எல்லை இல்லாத செய்யத்  0984-1
தள்ளும் செயல் இல்லார் சந்தனக் காப்புத் தேடிக்  0984-2
கொள்ளும் துறையும் அடைத்தான் கொடும் கோன்மை செய்வான்  0984-3
தெள்ளும் புனல் வேணியர்க்கு அன்பரும் சிந்தை நொந்து 0984-4

18. புன்மைச் செயல் வல் அமண் குண்டரில் போது போக்கும்  0985-1
வன்மைக் கொடும் பாதகன் மாய்திட வாய்மை வேத  0985-2
நன்மைத் திரு நீற்று உயர் நன்னெறி தாங்கு மேன்மைத்  0985-3
தன்மைப் புவி மன்னரைச் சார்வது என்று சார்வார்  0985-4

19. காய் உற்ற செற்றம் கொடு கண்டகன் காப்பவும் சென்று  0986-1
ஆய் உற்ற கொட்பில் பகல் எல்லை அடங்க நாடி  0986-2
ஏய் உற்ற நல் சந்தனம் எங்கும் பெறாது சிந்தை  0986-3
சாய் உற்றிட வந்தனர் தம்பிரான் கோயில் தன்னில்  0986-4

20. நட்டம் புரிவார் அணி நல் திரு மெய்ப் பூச்சு இன்று  0987-1
முட்டும் பரிசு ஆயினும் தேய்க்கும் கை முட்டது என்று  0987-2
வட்டம் திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்  0987-3
கட்டும் புறம் தோல் நரம்பு என்பு கரைந்து தேய 0987-4

21. கல்லின் புறம் தேய்ந்த முழங்கை கலுழ்ந்து சோரி  0988-1
செல்லும் பரப்பு எங்கணும் என்பு திறந்து முளை 0988-2
புல்லும்படி கண்டு பொறுத்திலர் தம்பிரான் ஆனார்  0988-3
அல்லின் கண் எழுந்தது உவந்து அருள் செய்த வாக்கு  0988-4

22. அன்பின் துணிவால் இது செய்திடல் ஐய உன்பால்  0989-1
வன் புன்கண் விளைத்தவன் கொண்ட மண் எல்லாம் கொண்டு  0989-2
முன் பின்னல் புகுந்தன முற்றவும் நீத்துக் காத்துப்  0989-3
பின்பு உன் பணி செய்து நம் பேர் உலகு எய்துக என்ன  0989-4

23. இவ் வண்ணம் எழுந்தது கேட்டு எழுந்து அஞ்சி முன்பு 0990-1
செய் வண்ணம் ஒழிந்திடத் தேய்ந்த புண் ஊறு தீர்ந்து  0990-2
கை வண்ணம் நிரம்பின வாசம் எல்லாம் கலந்து 0990-3
மொய் வண்ண விளங்கு ஒளி எய்தினர் மூர்த்தியார் தாம்  0990-4

24. அந் நாள் இரவின் கண் அமண் புகல் சார்ந்து வாழும்  0991-1
மன் ஆகிய போர் வடுகக் கருநாடர் மன்னன்  0991-2
தன் நாளும் முடிந்தது சங்கரன் சார்பு இலோர்க்கு  0991-3
மின் ஆம் என நீடிய மெய்ந் நிலையாமை வெல்ல  0991-4

25. இவ்வாறு உலகத்தின் இறப்ப உயர்ந்த நல்லோர்  0992-1
மெய் வாழ் உலகத்து விரைந்து அணைவார்களே போல்  0992-2
அவ்வாறு அரனார் அடியாரை அலைத்த தீயோன்  0992-3
வெவ்வாய் நிரயத்து இடை விரைந்து வீந்தான்  0992-4

26. முழுதும் பழுதே புரி மூர்க்கன் உலந்த போதின்  0993-1
எழுதும் கொடி போல்பவர் உட்பட ஏங்கு சுற்றம்  0993-2
முழுதும் புலர் உற்றது மற்று அவன் அன்ன மாலைப்  0993-3
பொழுதும் புலர் உற்றது செம் கதிர் மீது மோத  0993-4

27. அவ் வேலையில் அம் கண் அமைச்சர்கள் கூடித் தங்கள்  0994-1

கை வேறு கொள் ஈம அருங்கடன் காலை முற்றி 0994-2
வை வேலவன் தன் குல மைந்தரும் இன்மை யாலே 0994-3
செய் வேறு வினைத் திறம் சிந்தனை செய்து தேர்வார் 0994-4

28. தாழும் செயலின்று ஒரு மன்னவன் தாங்க வேண்டும் 0995-1
சூழும் குடியும் முதல் ஆயின கொள்கைத்து ஏனும் 0995-2
சூழும் படை மன்னவன் தோள் இணைக் காவல் இன்றி 0995-3
வாழும் தகைத்து அன்றி இந்த வையகம் என்று சொன்னார் 0995-4

29. பல் முறை உயிர்கள் எல்லாம் பாலித்து ஞாலம் காப்பான் 0996-1
தன் நெடும் குடைக் கீழ்த் தம் தம் நெறிகளில் சரிந்து வாழும் 0996-2
மன்னரை இன்றி வைகும் மண் உலகு எண்ணும் காலை 0996-3
இன்னுயிர் இன்றி வாழும் யாக்கையை ஒக்கும் என்பார் 0996-4

30. இவ் வகை பலவும் எண்ணி இங்கு இனி அரசர் இல்லை 0997-1
செய்வகை இதுவே என்று தெளிபவர் சிறப்பின் மிக்க 0997-2
மை வரை அனைய வேழம் கண் கட்டி விட்டால் மற்றக் 0997-3
கை வரை கைக் கொண்டார் மண் காவல் கைக் கொள்வார் என்று 0997-4

31. செம் மாண் வினை அர்ச்சனை நூல் முறை செய்து தோளால் 0998-1
இம் மாநிலம் ஏந்த ஓர் ஏந்தலை ஏந்துக என்று 0998-2
பெய்ம் மா முகில் போல் மதம் பாய் பெருகு ஓடை நெற்றிக் 0998-3
கைம் மாவை நறுந் துகில் கொண்டு கண் கட்டி விட்டார் 0998-4

32. கண் கட்டி விடும் களி யானை அக் காவல் மூதூர் 0999-1
மண் கொள் புற வீதி மருங்கு திரிந்து போகித் 0999-2
திண் பொன் தட மா மதில் சூழ் திரு ஆல வாயின் 0999-3
விண் பின் பட ஓங்கிய கோபுரம் முன்பு மேவி 0999-4

33. நீங்கும் இரவின் கண் நிகழ்ந்தது கண்ட தொண்டர் 1000-1
ஈங்கு எம் பெருமான் அருளாம் எனில் இந்த வையம் 1000-2
தாங்கும் செயல் பூண்பான் என்று உள்ளம் தளர்வு நீங்கிப் 1000-3
பூம் கொன்றை மிலைந்தவர் கோயில் புறத்து நிற்ப 1000-4

34. வேழத்து அரசு அம் கண் விரைந்து நடந்து சென்று 1001-1
வாழ்வு உற்று உலகம் செய் தவத்தினின் வள்ளலாரைச் 1001-2
சூழ் பொன் சுடர் மா மணி மா நிலம் தோய முன்பு 1001-3
தாழ்வு உற்று எடுத்துப் பிடர் மீது தரித்தது அன்றே 1001-4

35. மாதங்கம் எருத்தினில் வைத்தவர் தம்மைக் காணா 1002-1
ஏதம் கெட எண்ணிய திண்மை அமைச்சர் எல்லாம் 1002-2
பாதங்களின் மீது பணிந்து எழுந்தார்கள் அப்போது 1002-3
ஓதம் கிளர் வேலையை ஒத்து ஒலி மிக்கது அவ்வூர் 1002-4

36. சங்கங்கள் முரன்றன தாரைகள் பேரி யோடும் 1003-1
எங்கு எங்கும் இயம்பின பல் இயம் எல்லை இல்ல 1003-2
அங்கு அங்கு மலிந்தன வாழ்த்து ஒலி அம் பொன் கொம்பின் 1003-3
பங்கன் அருளால் உலகு ஆள்பவர் பாங்கர் எங்கும் 1003-4

37. வெம் கண் களிற்றின் மிசை நின்றும் இழிச்சி வேரித்து 1004-1
தொங்கல் சுடர் மாலைகள் சூழ் முடி சூடு சாலை 1004-2
அம் கண் கொடு புக்கு அரி ஆசனத்து ஏற்றி ஒற்றைத் 1004-3
திங்கள் குடைக் கீழ் உரிமைச் செயல் சூழ்ந்து செய்வார் 1004-4

38. மன்னும் திசை வேதியில் மங்கல ஆகுதிக் கண் 1005-1
துன்னும் சுடர் வன்னி வளர்த்துத் துதைந்த நூல் சூழ் 1005-2
பொன்னின் கலசங்கள் குடங்கள் பூரித்த தூ நீர் 1005-3
உன்னும் செயல் மந்திர யோகர் நிறுத்தினார்கள் 1005-4

39. வந்து உற்று எழு மங்கல மாந்தர்கள் தம்மை நோக்கிச் 1006-1
சிந்தைச் சிவமே தெளியும் திரு மூர்த்தியார் தாம் 1006-2
முந்தைச் செயலாம் அமண் போய் முதல் சைவம் ஓங்கில் 1006-3
இந்தப் புவி தாங்கி இவ் இன் அரசு ஆள்வான் என்றார் 1006-4

40. அவ்வாறு மொழிந்தது கேட்ட அமைச்சரோடு 1007-1
மெய் வாழ் தரு நூல் அறிவின் மிகு மாந்தர் தாமும் 1007-2
எவ்வாறு அருள் செய்தனை மற்று அவை அன்றி யாவர் 1007-3
செய்வார் பெரியோய் எனச் சேவடி தாழ்ந்து செப்ப 1007-4

41. வையம் முறை செய்வென் ஆகில் வயங்கு நீறே 1008-1
செய்யும் அபிடேகமும் ஆக செழும் கலன்கள் 1008-2
ஐயன் அடையாளமும் ஆக அணிந்து தாங்கும் 1008-3
மொய் புன் சடை மா முடியே முடி ஆவது என்றார் 1008-4

42. என்று இவ்வுரை கேட்டலும் எல்லை இல் கல்வி யோரும் 1009-1
வன் திண் மதி நூல் வளர் வாய்மை அமைச்சர் தாமும் 1009-2
நன்று இங்கு அருள் தான் என நல் தவ வேந்தர் சிந்தை 1009-3
ஒன்றும் அரசு ஆள் உரிமைச் செயல் ஆன உய்த்தார் 1009-4

43. மாடு எங்கும் நெருங்கிய மங்கல ஓசை மல்கச் 1010-1
சூடும் சடை மௌலி அணிந்தவர் தொல்லை ஏனம் 1010-2
தேடும் கழலார் திரு ஆல வாய் சென்று தாழ்ந்து 1010-3
நீடும் களிற்றின் மிசை நீள் மறுகு ஊடு போந்தார் 1010-4

44. மின்னும் மணி மாளிகை வாயிலின் வேழம் மீது 1011-1
தன்னின்றும் இழிந்து தயங்கு ஒளி மண்டபத்தில் 1011-2
பொன்னின் அரி மெல்லணைச் சாமரைக் காமர் பூம் கால் 1011-3
மன்னும் குடை நீழல் இருந்தனர் வையம் தாங்கி 1011-4

45. குலவும் துறை நீதி அமைச்சர் குறிப்பின் வைகக் 1012-1
கலகம் செய் அமண் செயல் ஆயின கட்டு நீங்கி 1012-2
நிலவும் திரு நீற்று நெறித் துறை நீடு வாழ 1012-3
உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்ன 1012-4

46. நுதலின் கண் விழித்தவர் வாய்மை நுணங்கு நூலின் 1013-1
பதம் எங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற 1013-2
உதவும் திருநீறு உயர் கண்டிகை கொண்ட வேணி 1013-3
முதன் மும்மையினால் உலகு ஆண்டனர் மூர்த்தியார் தாம் 1013-4

47. ஏலம் கமழ் கோதையர் தம் திறம் என்றும் நீங்கும் 1014-1
சீலம் கொடு வெம் புலன் தெவ்வுடன் வென்று நீக்கி 1014-2
ஞாலம் தனி நேமி நடாத்தி நலம் கொள் ஊழிக் 1014-3
காலம் உயிர்கட்கு இடர் ஆன கடிந்து காத்து 1014-4

48. பாதம் பர மன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற 1015-1
ஏதம் பிணியா வகை இவ் உலகு ஆண்டு தொண்டின் 1015-2
பேதம் புரியா அருள் பேர் அரசாளப் பெற்று 1015-3
நாதன் கழல் சேவடி நண்ணினர் அண்ணலார் ஏ 1015-4

49. அகல் பாறையில் வைத்து முழங் கையை அன்று தேய்த்த 1016-1
இகலார் களிற்று அன்பரை ஏத்தி முருகனார் ஆம் 1016-2
முகில் சூழ் நறும் சோலையின் மொய் ஒளி மாட வீதிப் 1016-3
புகலூர் வரும் அந்தணர் தம் திறம் போற்றல் உற்றாம் 1016-4

1. தாது சூழும் குழல் மலையாள் தளிக்கை சூழும் திருமேனி 1017-1
மீது சூழும் புனல் கற்றை வேணி நம்பர் விரும்பு பதி 1017-2
சோதி சூழும் மணி மௌலிச் சோழர் பொன்னி திரு நாட்டுப் 1017-3
போது சூழும் தடம் சோலைப் பொய்கை சூழும் பூம் புகலூர் 1017-4

2. நாம மூதூர் மற்று அதனுள் நல்லோர் மனம் போல் அரவு அணிந்த 1018-1
சேம நிலவு திரு நீற்றின் சிறந்த வெண்மைத் திருந்து ஒளியால் 1018-2
யாம இருளும் வெளி ஆக்கும் இரவே அல்ல விரை மலர் மேல் 1018-3
காமர் மது உண் சிறை வண்டும் களங்கம் இன்றி விளங்கும் ஆல் 1018-4

3. நண்ணும் இசை தேர் மது கரங்கள் நனை மென் சினையின் மருங்கு அலைய 1019-1
வண்ண மதுரத் தேன் பொழிவ வாச மலர் வாயே அல்ல 1019-2
தண் என் சோலை எம் மருங்கும் சாரும் மடமென் சாரிகையின் 1019-3
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழும் தேன் பொழியும் ஆல் 1019-4

4. வண்டு பாடப் புனல் தடத்து மலர்ந்து கண்ணீர் அரும்புவன 1020-1
கொண்ட வாச முகை அவிந்த குளிர் பங்கயங்களே அல்ல 1020-2
அண்டர் பெருமான் திருப் பாட்டின் அமுதம் பெருகச் செவி மடுக்கும் 1020-3
தொண்டர் வதன பங்கயமும் துளித்த கண்ணீர் அரும்பும் ஆல் 1020-4

5. ஆன பெருமை வளம் சிறந்த அம் தண் புகலூர் அது தன்னில் 1021-1
மான மறையோர் குல மரபின் வந்தார் முந்தை முதல்வர் 1021-2
ஞான வரம்பின் தலை நின்றார் நாகம் புளை வார் சேவடிக் கீழ் 1021-3
ஊனம் இன்றி நிறை அன்பால் உருகு மனத்தார் முருகனார் 1021-4

6. அடை மேல் அலவன் துயில் உணர அலர் செம் கமல வயல் கயல்கள் 1022-1
மடை மேல் உகளும் திருப்புகலூர் மன்னி வாழும் தன்மையராய் 1022-2
விடை மேல் வருவார்க்கு ஆளான மெய்ம்மை தவத்தால் அவர் கற்றைச் 1022-3
சடை மேல் அணியத் திருப் பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார் 1022-4

7. புலரும் பொழுதின் முன் எழுந்து புனித நீரில் மூழ்கிப் போய் 1023-1
மலரும் செவ்வித் தம் பெருமான் முடிமேல் வான் நீர் ஆறுமதி 1023-2
உலவும் மருங்கு முருகு உயிர்க்க நகைக்கும் பதத்தின் உடன் பறித்த 1023-3
அலகில் மலர்கள் வெவ் வேறு திருப்பூம் கூடைகளில் அமைப்பார் 1023-4

8. கோட்டு மலரும் நில மலரும் நீர் மலரும் கொழும் கொடியின் 1024-1
தோட்டு மலரும் மா மலரும் சுருதி மலரும் திருவாயில் 1024-2
காட்டு முறுவல் நிலவு அலரக் கனக வரையில் பன்னக நாண் 1024-3
பூட்டும் ஒருவர் திரு முடி மேல் புனையல் ஆகும் மலர் தெரிந்து 1024-4

9. கொண்டு வந்து தனி இடத்தில் இருந்து கோக்கும் கோவைகளும் 1025-1
இண்டைச் சுருக்கும் தாமம் உடன் இணைக்கும் வாச மாலைகளும் 1025-2
தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளில் பிணைக்கும் பிணையல்களும் 1025-3
நுண்டாது இறைக்கும் தொடையல்களும் சமைத்து நுடங்கும் நூல் மார்பர் 1025-4

10. ஆங்கு அப் பணிகள் ஆன வற்றுக்கு அமைத்த காலங்களின் அமைத்துத் 1026-1
தாங்கிக் கொடு சென்று அன்பினொடும் சாத்தி வாய்ந்த அர்ச்சனைகள் 1026-2
பாங்கில் புரிந்து பரிந்து உள்ளார் பரமர் பதிகப் பற்று ஆன 1026-3
ஓங்கிச் சிறந்த அஞ்சு எழுத்தும் ஓவா நாவின் உணர்வினார் 1026-4

11. தள்ளும் முறைமை ஒழிந்திட இத் தகுதி ஒழுகும் மறையவர் தாம் 1027-1
தெள்ளு மறைகள் முதலான ஞானம் செம் பொன் வள்ளத்தில் 1027-2
அள்ளி அகிலம் ஈன்று அளித்த அம்மை முலைப்பால் உடன் உண்ட 1027-3
பிள்ளையார்க்கு நண்பரும் ஆம் பெருமை உடையார் ஆயினார் 1027-4

12. அன்ன வடிவும் ஏனமும் ஆய் அறிவார் இருவர் அறியாமல் 1028-1
மன்னும் புகலூர் உறைவாரை வர்த்த மான வீச்சுரத்து 1028-2

நன்னர் மகிழ்ச்சி மனம் கொள்ள நாளும் பூசை வழுவாமே 1028-3
பன்னும் பெருமை அஞ்சு எழுத்தும் பயின்றே பணிந்து பரவினார் 1028-4

13. அம் கண் அமரும் திரு முருகர் அழகார் புகலிப் பிள்ளையார் 1029-1
பொங்கு மணத்தின் முன் செய்த பூசை அதனால் புக்கு அருளிச் 1029-2
செம் கண் அடல் ஏறு உடையவர் தாம் சிறந்த அருளின் பொருள் அளிக்கத் 1029-3
தங்கள் பெருமான் அடி நீழல் தலையாம் நிலைமை சார்வு உற்றார் 1029-4

14. அரவம் அணிந்த அரையாரை அருச்சித்து அவர் தம் கழல் நிழல் கீழ் 1030-1
விரவு புகலூர் முருகனார் மெய்மைத் தொண்டின் திறம் போற்றிக் 1030-2
கரவில் அவர் பால் வருவாரைக் கருத்தில் உருத்திரம் கொண்டு 1030-3
பரவும் அன்பர் பசு பதியார் பணிந்த பெருமை பகர் உற்றேன் 1030-4

17 உருத்திர பசுபதி நாயனார் புராணம்

1. நிலத்தின் ஓங்கிய நிவந்து எழும் பெரும் புனர் நீத்தம் 1031-1
மலர்த் தடம் பணை வயல் புகு பொன்னி நல் நாட்டுக் 1031-2
குலத்தின் ஓங்கிய குறைவு இலா நிறை குடி குழுமித் 1031-3
தலத்தின் மேம் படு நலத்தது பெரும் திருத் தலையூர் 1031-4

2. வான் அளிப்பன மறையவர் வேள்வியின் வளர் தீ 1032-1
தேன் அளிப்பன நறுமலர் செறி செழும் சோலை 1032-2
ஆன் அளிப்பன அம் சுகந்து ஆடுவார்க்கு அவ்வூர் 1032-3
தான் அளிப்பன தருமமும் நீதியும் சால்பும் 1032-4

3. அம் கண் மா நகர் அதன் இடை அருமறை வாய்மைத் 1033-1
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர் 1033-2
செம் கண் மால் விடையார் செழும் பொன் மலை வல்லி 1033-3
பங்கனார் அடிமைத் திறம் புரி பசு பதியார் 1033-4

4. ஆய அந்தணர் அருமறை உருத்திரம் கொண்டு 1034-1
மாயனார் அறியா மலர்ச் சேவடி வழுத்தும் 1034-2
தூய அன்பொடு தொடர்பினில் இடை அருச் சுருதி 1034-3
நேய நெஞ்சினர் ஆகி அத் தொழில் தலை நின்றார் 1034-4

5. கரை இல் கம்பலை புள் ஒலி கறங்கிட மருங்கு 1035-1
பிரச மென் சுரும்பு அறைந்திடக் கரு வரால் பிறழும் 1035-2
நிரை நெடும் கயல் நீரிடை நெருப்பு எழுந்தது அனைய 1035-3
விரை நெகிழ்ந்த செம் கமலம் என் பொய்கையுள் மேவி 1035-4

6. தெள்ளு தண் புனல் கழுத்து அலவு ஆயிடைச் செறிய 1036-1
உள் உறப் புக்கு நின்று கை உச்சி மேல் குவித்துத் 1036-2
தள்ளு வெண் திரைக் கங்கை நீர் ததும்பிய சடையார் 1036-3
கொள்ளும் அன்பினில் உருத்திரம் குறிப்பொடு பயின்றார் 1036-4

7. அரு மறைப் பயன் ஆகிய உருத்திரம் அதனை 1037-1
வரு முறைப் பெரும் பகலும் எல்லியும் வழுவாமே 1037-2
திருமலர்ப் பொருட்டு இருந்தவன் அனையவர் சில நாள் 1037-3
ஒருமை உய்ந்திட உமை இடம் மகிழ்ந்தவர் உவந்தார் 1037-4

8. காதல் அன்பர் தம் அரும் தவப் பெருமையும் கலந்த 1038-1
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி 1038-2
ஆதி நாயகர் அமர்ந்து அருள் செய்ய மற்று அவர் தாம் 1038-3
தீது இலா நிலைச் சிவபுரி எல்லையில் சேர்ந்தார் 1038-4

9. நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால் 1039-1
ஆடு சேவடி அருகு உற அணைந்தனர் அவர்க்குப் 1039-2
பாடு பெற்ற சீர் உருத்திர பசுபதியார் ஆம் 1039-3

கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற 1039-4

10. அயில் கொள் முக் குடுமிப் படையார் மருங்கு அருளால் 1040-1
பயில் உருத்திர பசுபதியார் திறம் பரசி 1040-2
எயில் உடைத் தில்லை எல்லையில் நாளைப் போவார் ஆம் 1040-3
செயல் உடைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம் 1040-4

18 திரு நாளைப் போவர் நாயனார் புராணம்
1. பகர்ந்து உலகு சீர் போற்றும் பழை வளம் பதியாகும் 1041-1
திகழ்ந்த புனல் கொள்ளிடம் பொன் செழுமணிகள் திரைக் கரத்தால் 1041-2
முகந்து தர இரு மருங்கும் முளரி மலர்க் கையேற்கும் 1041-3
அகல் பணை நீர் நல் நாட்டு மேற் கான் ஆட்டு ஆதனூர் 1041-4

2. நீற்று அலர் பேர் ஒளி நெருங்கும் அப்பதியின் நிறை கரும்பின் 1042-1
சாற்று அலைவன் குலை வயலில் தகட்டு வரால் எழப் பகட்டு ஏர் 1042-2
ஆற்று அலவன் கொழுக் கிழித்த சால் வழி போய் அசைந்து ஏறிச் 1042-3
சேற்று அலவன் கரு உயிர்க்க முருகு உயிர்க்கும் செழும் கமலம் 1042-4

3. நனை மருவும் சினை பொதுளி நறு விரை சூழ் செறி தளிரில் 1043-1
தினகர மண்டலம் வருடும் செழும் தருவின் குலம் பெருகிக் 1043-2
கனம் அருவி அசைந்து அலையக் களி வண்டு புடை சூழப் 1043-3
புனல் மழையோ மது மழையோ பொழிவு ஒழியா பூஞ்சோலை 1043-4

4. பாளை விரி மணம் கமழும் பைங் காய் வன் தெங்கின் 1044-1
தாள் அதிர மிசை முட்டித் தடம் கிடங்கின் எழப்பாய்ந்த 1044-2
வாளை புதையச் சொரிந்த பழம் மிதப்ப வண் பலவின் 1044-3
நீளம் முதிர் கனி கிழி தேன் நீத்தத்தில் எழுந்து உகளும் 1044-4

5. வயல் வளமும் செயல் படு பைந் துடவை இடை வரும் வளமும் 1045-1
வியல் இடம் எங்கணும் நிறைய மிக்க பெரும் திருவின ஆம் 1045-2
புயல் அடையும் மாடங்கள் பொலிவு எய்த மலி உடைத்தாய் 1045-3
அயல் இடை வேறு அடி நெருங்கக் குடி நெருங்கி உளது அவ்வூர் 1045-4

6. மற்று அவ் ஊர் புறம் பணையின் வயல் மருங்கு பெரும் குலையில் 1046-1
சுற்றம் விரும்பிய கிழமைத் தொழில் உழவர் கிளை துவன்றிப் 1046-2
பற்றிய பைம் கொடிச் சுரை மேல் படர்ந்த பழம் கூரை உடைப் 1046-3
புல் குரம்பைச் சிற்றில் பல நிறைந்து உளது ஓர் புலைப்பாடி 1046-4

7. கூர் உகிர் மெல் அடி அலகின் குறும் பார்ப்புக் குழுச் சுழலும் 1047-1
வார் பயில் முன்றிலில் நின்ற வள் உகிர் நாய் துள்ளு பறழ் 1047-2
கார் இரும்பின் சரி செறிகைக் கரும் சிறார் கவர்ந்து ஓட 1047-3
ஆர் சிறு மென் குரைப்பு அடக்கும் அரைக்கு அசைத்த இருப்பு மணி 1047-4

8. வன் சிறு தோல்மிசை உழத்தி மகவு உறக்கும் நிழல் மருதும் 1048-1
தன் சினை மென் பெடை ஒடுங்கும் தடம் குழிசிப் புதை நீழல் 1048-2
மென் சினைய வஞ்சிகளும் விசிப் பறை தூங்கு இன மாவும் 1048-3
புன் தலை நாய்ப் புனிற்று முழைப் புடைத்து எங்கும் உடைத்து எங்கும் 1048-4

9. செறி வலித் திண் கடைஞர் வினைச் செயல்புரிவை கறை யாமக் 1049-1
குறி அளக்க உளைக்கும் செங் குடுமி வாரணச் சேக்கை 1049-2
வெறி மலர்த் தண் சினைக் காஞ்சி விரி நீழல் மருங்கு எல்லாம் 1049-3
நெறி குழல் புன் புலை மகளிர் நெற் குறு பாட்டு ஒலி பரக்கும் 1049-4

10. புள்ளும் தண் புனல் கலிக்கும் பொய்கை உடைப் புடை எங்கும் 1050-1
தள்ளும் தாள் நடை அசையத் தளை அவிழ் பூம் குவளை மது 1050-2
விள்ளும் பைம் குழல் கதிர் நெல் மிலைச்சிய புன் புலைச்சியர்கள் 1050-3
கள் உண்டு களி தூங்கக் கறங்கு பறையும் கலிக்கும் 1050-4

11. இப்படித்து ஆகிய கடைஞர் இருப்பின் வரைப்பினில் வாழ்வார் 1051-1
மெய்ப்பரிவு சிவன் கழற்கே விளைத்த உணர்வு ஓடும் வந்தார் 1051-2
அப்பதியில் ஊர் புலைமை ஆன்ற தொழில் தாயத்தார் 1051-3
ஒப்பு இல் அவர் நந்தனார் என ஒருவர் உளர் ஆனார் 1051-4

12. பிறந்து உணர்வு தொடங்கிய பின் பிறைக் கண்ணிப் பெருந்தகைபால் 1052-1
சிறந்த பெரும் காதலினால் செம்மை புரி சிந்தையர் ஆய் 1052-2
மறந்தும் அயல் நினைவு இன்றி வரு பிறப்பின் வழி வந்த 1052-3
அறம் புரி கொள்கையர் ஆயே அடித்தொண்டின் நெறி நின்றார் 1052-4

13. ஊரில் விடும் பறைத் துடைவை உண உரிமை ஆக்கிக் கொண்டு 1053-1
சார்பில் வரும் தொழில் செய்வார் தலை நின்றார் தொண்டினால் 1053-2
கூர் இலை முக் குடுமிப் படை அண்ணல் கோயில் தொறும் 1053-3
பேரிகை முதல் ஆய முகக் கருவி பிறவினுக்கும் 1053-4

14. போர்வைத் தோல் விசி வார் என்று இனையனவும் புகலும் இசை 1054-1
நேர் வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலை வகையில் 1054-2
சேர் உற்ற தந்திரியும் தேவர் பிரான் அர்ச்சனை கட்கு 1054-3
ஆர்வத்தின் உடன் கோரோசனையும் இவை அளித்து உள்ளார் 1054-4

15. இவ் வகையால் தம் தொழிலின் இயன்ற வெலாம் எவ்விடத்தும் 1055-1
செய்வனவும் கோயில்களில் திரு வாயில் புறம் நின்று 1055-2
மெய் விரவு பேரன்பு மிகுதியினால் ஆடுதலும் 1055-3
அவ் இயல்பில் பாடுதலும் ஆய் நிகழ்வார் அந்நாளில் 1055-4

16. திருப் புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிக நினைந்து 1056-1
விருப்பின் ஓடும் தம் பணிகள் வேண்டுவன செய்வதற்கே 1056-2
அருத்தியினால் ஒருப்பட்டு அங்கு ஆதனூர் தனில் நின்றும் 1056-3
வருத்தம் உறும் காதலினால் வந்து அவ்வூர் மருங்கு அணைந்தார் 1056-4

17. சீர் ஏறும் இசை பாடித் திருத் தொண்டர் திரு வாயில் 1057-1
நேரே கும்பிட வேண்டும் என நினைந்தார்க்கு அத் நேர்வார் 1057-2
கார் ஏறும் எயில் புன் கூர்க் கண் நுதலார் திரு முன்பு 1057-3
பேர் ஏற்றை விலங்க அருள் புரிந்து அருளிப் புலப்படுத்தார் 1057-4

18. சிவலோகம் உடையவர் தம் திரு வாயில் முன் நின்று 1058-1
பவ லோகம் கடப்பவர் தம் பணிவிட்டுப் பணிந்து எழுந்து 1058-2
சுவல் ஓடுவார் அலையப் போவார் பின் பொரு சூழல் 1058-3
அவ லோடும் அடுத்தது கண்டு ஆதரித்துக் குளம் தொட்டார் 1058-4

19. வடம் கொண்ட பொன் இதழி மணி முடியார் திரு அருளால் 1059-1
தடம் கொண்ட குளத்து அளவு சமைத்து அதற்பின் தம் பெருமான் 1059-2
இடம் கொண்ட கோயில் புறம் வலம் கொண்டு பணிந்து எழுந்து 1059-3
நடம் கொண்டு விடை கொண்டு தம் பதியில் நண்ணினார் 1059-4

20. இத் தன்மை ஈசர் மகிழ் பதி பலவும் சென்று இறைஞ்சி 1060-1
மெய்த் திருத் தொண்டு செய்து விரவுவார் மிக்கு எழுந்த 1060-2
சித்தம் ஒடும் திருத் தில்லைத் திரு மன்று சென்று இறைஞ்ச 1060-3
உய்த்த பெரும் காதல் உணர்வு ஒழியாது வந்து உதிப்ப 1060-4

21. அன்று இரவு கண் துயிலார் புலர்ந்து அதற்பின் அங்கு எய்த 1061-1
ஒன்றி அணை தரு தன்மை உறு குலத்தோடு இசைவு இல்லை 1061-2
என்று இதுவும் எம்பெருமான் ஏவல் எனப் போக்கு ஒழிவார் 1061-3
நன்று எழும் காதல் மிக நாளைப் போவேன் என்பார் 1061-4

22. நாளைப் போவேன் என்று நாள்கள் செலத் தரியாது 1062-1
பூளைப் பூவாம் பிறவிப் பிணிப்பு ஒழியப் போவாராய் 1062-2

பாளைப் பூம் கமுகு உடுத்த பழம் பதியின் நின்றும் போய் 1062-3
வாளைப் போத்து எழும் பழனம் சூழ் தில்லை மருங்கு அணைவார் 1062-4

23. செல்கின்ற போழ்து அந்தத் திரு எல்லை பணிந்து எழுந்து 1063-1
பல்கும் செம் தீ வளர்த்த பயில் வேள்வி எழும் புகையும் 1063-2
மல்கு பெரும் இடை ஓதும் மடங்கள் நெருங்கினவும் கண்டு 1063-3
அல்கும் தம் குலம் நினைந்தே அஞ்சி அணைந்திலர் நின்றார் 1063-4

24. நின்றவர் அங்கு எய்தற்கு அரிய பெருமையினை நினைப்பார் முன் 1064-1
சென்று இவையும் கடந்து ஊர் சூழ் எயில் திருவாயிலைப் புக்கார் 1064-2
குன்று அனைய மாளிகைகள் தொறும் குலவும் வேதிகைகள் 1064-3
ஒன்றிய மூவாயிரம் அங்கு உள என்பார் ஆகுகள் 1064-4

25. இப்பரிசாய் இருக்க எனக்கு எய்தல் அரிது என்று அஞ்சி 1065-1
அப்பதியின் மதில் புறத்தின் ஆராத பெருங் காதல் 1065-2
ஒப்ப அரிதாய் வளர்ந்து ஓங்க உள் உருகிக் கை தொழுதே 1065-3
செப்ப அரிய திரு எல்லை வலங் கொண்டு செல்கின்றார் 1065-4

26. இவ் வண்ணம் இரவு பகல் வலம் செய்து அங்கு எய்து அரிய 1066-1
அவ் வண்ணம் நினைந்து அழிந்த அடித் தொண்டர் அயர்வு எய்தி 1066-2
மை வண்ணத்து திரு மிடற்றார் மன்றில் நடம் கும்பிடுவது 1066-3
எவ் வண்ணம் என நினைந்தே ஏசறவின் ஒடும் துயில்வார் 1066-4

27. இன்னல் தரும் இழி பிறவி இது தடை என்றே துயில்வார் 1067-1
அந் நிலைமை அம்பலத்துள் ஆடுவார் அறிந்து அருளி 1067-2
மன்னு திருத் தொண்டர் அவர் வருத்தம் எல்லாம் தீர்ப்பதற்கு 1067-3
முன் அணைந்து கனவின் கண் முறுவல் ஒடும் அருள் செய்வார் 1067-4

28. இப் பிறவி போய் நீங்க எரியின் இடை நீ மூழ்கி 1068-1
முப்புரி நூல் மார்பர் உடன் முன் அணைவாய் என்ன மொழிந்து 1068-2
அப் பரிசே தில்லை வாய் அந்தணர்க்கும் எரி அமைக்க 1068-3
மெய்ப் பொருள் ஆனார் அருளி அம்பலத்தே மேவினார் 1068-4

29. தம் பெருமான் பணி கேட்ட தவ மறையோர் எல்லாரும் 1069-1
அம்பலவர் திருவாயின் முன்பு அச்சமுடன் ஈண்டி 1069-2
எம்பெருமான் அருள் செய்த பணி செய்வோம் என்று ஏத்தித் 1069-3
தம் பரிவு பெருக வரும் திருத் தொண்டர் பால் சார்ந்தார் 1069-4

30. ஐயரே அம்பலவர் அருளால் இப் பொழுது அணைந்தோம் 1070-1
வெய்ய அழல் அமைத்து உமக்குத் தர வேண்டி என விளம்ப 1070-2
நையும் மனத் திருத் தொண்டர் நான் உய்ந்தேன் எனத் தொழுதார் 1070-3
தெய்வ மறை முனிவர்களும் தீ அமைத்த படி மொழிந்தார் 1070-4

31. மறையவர்கள் மொழிந்து அதன் பின் தென் திசையின் மதில் புறத்துப் 1071-1
பிறை உரிஞ்சும் திருவாயில் முன்பாக பிஞ்ஞகர் தம் 1071-2
நிறை அருளால் மறையவர்கள் நெருப்பு அமைத்த குழி எய்தி 1071-3
இறையவர் தாள் மனம் கொண்டே எரி சூழல் வலம் கொண்டார் 1071-4

32. கை தொழுது நடம் ஆடும் கழல் உன்னி அழல் புக்கார் 1072-1
எய்திய அப் பொழுதின் கண் எரியின் கண் இம்மாயப் 1072-2
பொய் தகையும் உருவு ஒழித்துப் புண்ணிய மா முனி வடிவாய் 1072-3
மெய் திகழ் வெண் நூல் விளங்க வேணி முடி கொண்டு எழுந்தார் 1072-4

33. செம் தீ மேல் எழும் பொழுது செம்மலர் மேல் வந்து எழுந்த 1073-1
அந்தணன் போல் தோன்றினார் அந்தரத்து துந்துபி நாதம் 1073-2
வந்து எழுந்தது இரு விசும்பில் வானவர்கள் மகிழ்ந்து ஆர்த்துப் 1073-3
பைந் துணர் மந்தாரத்தின் பனி மலர்மாரிகள் பொழிந்தார் 1073-4

34. திரு உடைய தில்லைவாழ் அந்தணர்கள் கை தொழுதார் 1074-1
பர அரிய தொண்டர்களும் பணிந்து மனம் களிப் பயின்றார் 1074-2
அரு மறை சூழ் திரு மன்றில் ஆடுகின்ற கழல் வணங்க 1074-3
வருகின்றார் திரு நாளைப் போவாராம் மறை முனிவர் 1074-4

35. தில்லை வாழ் அந்தணரும் உடன் செல்லச் சென்று எய்தி 1075-1
ஒல்லை மான் மறிக் கரத்தார் கோபுரத்தைத் தொழுது இறைஞ்சி 1075-2
ஒல்லை போய் உட்புகுந்தார் உலகு உய்ய நடம் ஆடும் 1075-3
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர் களும் கண்டிலர் ஆல் 1075-4

36. அந்தணர்கள் அதிசயத்தார் அருமுனிவர் துதி செய்தார் 1076-1
வந்து அணைந்த திருத் தொண்டர் தம்மை வினை மாசு அறுத்து 1076-2
சுந்தரத் தாமரை புரையும் துணை அடிகள் தொழுது இருக்க 1076-3
அந்தம் இலா ஆனந்தப் பெரும் கூத்தர் அருள் புரிந்தார் 1076-4

37. மாசு உடம்பு விடத் தீயின் மஞ்சனம் செய்து அருளி எழுந்து 1077-1
ஆசில் மறை முனி ஆகி அம்பலவர் தாள் அடைந்தார் 1077-2
தேசு உடைய கழல் வாழ்த்தித் திருக் குறிப்புத் தொண்டவிளைப் 1077-3
பாசம் உற முயன்றவர்தம் திருத் தொண்டின் பரிசு உரைப்பாம் 1077-4

## 19 திருக் குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்

1. ஏயுமாறு பல் உயிர்களுக்கு எல்லை இல் கருணைத் 1078-1
தாய் ஆனாள் தனி ஆயின தலைவரைத் தழுவ 1078-2
ஆயும் நான்மறை போற்ற நின்று அரும் தவம் புரியத் 1078-3
தூய மாதவம் செய்தது தொண்டை நல் நாடு 1078-4

2. நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து நயந்த 1079-1
தன்மை மேவிய தலைமை சால் பெருங்குடி தழைப்ப 1079-2
வன்மை ஓங்கு எயில் வளம் பதி பயின்றது வரம்பின் 1079-3
தொன்மை மேன்மையில் நிகழ் பெரும் தொண்டை நல் நாடு 1079-4

3. நல் திறம் புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவை வந்து 1080-1
உற்ற போது தம் உயிரையும் வணிகனுக்கு ஒரு கால் 1080-2
சொற்ற மெய்ம்மையும் தூக்கி அச் சொல்லையே காக்கப் 1080-3
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெரும் தொண்டை நாடு 1080-4

4. ஆணை ஆம் என நீறு கண்டு அடிச்சேரன் என்னும் 1081-1
சேண் உலாவு சீர்ச் சேரனார் திருமலை நாட்டு 1081-2
வாண் நிலாவு பூண் வயவர்கள் மைத்துனக் கேண்மை 1081-3
பேண நீடிய முறையது பெரும் தொண்டை நாடு 1081-4

5. கறை விளங்கிய கண்டர் பால் காதல் செய் முறைமை 1082-1
நிறை புரிந்திட நேர் இழை அறம் புரிந்த அதனால் 1082-2
பிறை உரிஞ்சு எயில் பதியில் பெரும் தொண்டை நாட்டு 1082-3
முறைமை ஆம் என உலகினில் மிகு மொழி உடைத்தால் 1082-4

6. தாவில் செம்மணி அருவி ஆறு இழிவன சாரல் 1083-1
பூவில் வண்டு இனம் புது நறவு அருந்துவ புறவம் 1083-2
வாவி நீள் கயல் வரம்பு இற உகைப்பன மருதம் 1083-3
நீவி நித்திலம் பரத்தியர் உணக்குவ நெய்தல் 1083-4

7. குறவர் பல் மணி அரித்து இதை விதைப்பன குறிஞ்சி 1084-1
கறவை ஆன் நிரை மான் உடன் பயில்வன கானம் 1084-2
பறவை தாமரை இருந்து இற வருந்துவ பழனம் 1084-3
சுறவ முள் மருப்பு அணங்கு அயர்வன கழிச் சூழல் 1084-4

8. கொண்டல் வானத்தின் மணி சொரிவன குல வரைப்பால் 1085-1

தண்டு உணர்க் கொன்றை பொன் சொரி தள வயற்பால் 1085-2
வண்டல் முத்த நீர் மண்டு கால் சொரிவன வயற்பால் 1085-3
கண்டல் முன் துறைக் கரி சொரிவன கலம் கடற்பால் 1085-4

9. தேன் நிறைந்த செம் தினை இடி தரு மலைச் சீறூர் 1086-1
பால் நிறைந்த புல் பதத்தன முல்லை நீள் பாடி 1086-2
தூ நெல் அன்னம் நெய் கன்னலின் கனிய தண் துறையூர் 1086-3
மீன் நிறைந்த பேர் உணவின வேலை வைப்பு இடங்கள் 1086-4

10. குழல் செய் வண்டு இனம் குறிஞ்சி யாழ் முரல்வன குறிஞ்சி 1087-1
முழவு கார் கொள முல்லைகள் முகைப்பன முல்லை 1087-2
மழலை மென் கிளி மருது அமர் சேக்கைய மருதம் 1087-3
நிழல் செய் கைதை சூழ் நெய்தல் அம் கழியன நெய்தல் 1087-4

11. மல்கும் அப் பெரு நிலங்களில் வரை புணர் குறிஞ்சி 1088-1
எல்லை எங்கணும் இறவுளர் ஏனல் முன் விளைக்கும் 1088-2
பல் பெரும் புனம் பயில்வன படர் சிறைத் தோகை 1088-3
சொல்லும் அப்புனம் காப்பவும் சுரி குழல் தோகை 1088-4

12. அம் கண் வான்மிசை அரம்பையர் கரும் குழல் சுரும்பு 1089-1
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழல் மூழ்கிப் போகாச் 1089-2
செம் கண் மால் விடையார் திருக்காளத்தி என்னும் 1089-3
மங்குல் சூழ் வரை நிலவிய வாழ்வினால் மல்கும் 1089-4

13. பேறு வேர் சூழ் இமையவர் அரம்பையர் பிறந்து 1090-1
மாறு இல் வேடரும் மாதரும் ஆகவே வணங்கும் 1090-2
ஆறு சூழ் சடை அண்ணலார் திரு விடைச் சுரமும் 1090-3
கூறு மேன்மையின் மிக்க தம் நாட்டு வண் குறிஞ்சி 1090-4

14. அம் பொன் வார் குழல் கொடிச்சியர் உடன் அர மகளிர் 1091-1
வம்பு உலாம் மலர்ச் சுனை படிந்து ஆடு நீள் வரைப்பின் 1091-2
உம்பர் நாயகர் திருக் கழுக் குன்றமும் உடைத்தால் 1091-3
கொம்பர் வண்டு சூழ் குறிஞ்சி செய் தவம் குறை உளதோ 1091-4

15. கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்த சில் விடங்கள் 1092-1
நீல வாள் படை நீல கோட்டங்களும் நிரந்து 1092-2
கால வேனிலில் கடும் பகல் பொழுதினைப் பற்றிப் 1092-3
பாலையும் சொலல் ஆவன உள பரல் முரம்பு 1092-4

16. சொல்லும் எல்லையின் புறத்தன துணர்ச் சுரும்பு அலைக்கும் 1093-1
பல் பெரும் புனல் கான் ஆறு இடை இடை பரந்து 1093-2
கொல்லை மெல் இணர்க் குருந்தின் மேல் படர்ந்த பூம்பந்தர் 1093-3
முல்லை மென் புதல் முயல் உகைத்து தடங்கு நீள் முல்லை 1093-4

17. பிளவு கொண்ட தண் மதி நுதல் பேதையர் எயிற்றைக் 1094-1
களவு கொண்டது அளவு எனக் களவு அலர் தூற்றும் 1094-2
அளவு கண்டவர் குழல் நிறம் கனியும் அக் களவைத் 1094-3
தளவு கண்டு எதிர் சிரிப்பன தமக்கும் உண்டு என்று 1094-4

18. மங்கையர்க்கு வாள் விழி இணை தோற்ற மான் குலங்கள் 1095-1
எங்கும் மற்று அவர் இடைக்கு இடை மலர்க் கொடி எங்கும் 1095-2
அம் கண் முல்லையின் தெய்வம் என்று அரும் தமிழ் உரைக்கும் 1095-3
செம் கண் மால் தொழும் சிவன் மகிழ் திரு முல்லை வாயில் 1095-4

19. நீறு சேர் திரு மேனியர் நிலாத் திகழ் முடிமேல் 1096-1
மாறு இல் கங்கை தான் அவர்க்கு மஞ்சனம் தர அணைந்தே 1096-2
ஊறு நீர் தரும் ஒளி மலர்க் கலிகை மா நகரை 1096-3
வேறு தன் பெரு வைப்பு என விளங்கும் மா முல்லை 1096-4

20. வாச மென் மலர் மல்கிய முல்லை சூழ் மருதம் 1097-1
வீசு தெண் திரை நதி பல மிக்கு உயர்ந்து ஓடி 1097-2
பாசடைத் தடம் தாமரைப் பழனங்கள் மருங்கும் 1097-3
பூசல் வன் கரைக் குளங்களும் ஏரியும் புகுவ 1097-4

21. துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரி பால் 1098-1
பொங்கும் தீர்த்தம் ஆய் நந்தி மால் வரை மிசைப் போந்தே 1098-2
அம் கண் நித்திலம் சந்தனம் அகில் ஒடு மணிகள் 1098-3
பங்கயத் தடம் நிறைப்ப வந்து இழிவது பாலி 1098-4

22. பிள்ளை தை வரப் பெருகு பால் முலைத் தாய் போல் 1099-1
மள்ளர் வேனிலின் மணல் திடர் பிசைந்து கை வருட 1099-2
வெள்ள நீர் இரு மருங்கு கால் வழி மிதந்து ஏறிப் 1099-3
பள்ள நீள் வயல் பருமடை உடைப்பது பாலி 1099-4

23. அனைய ஆகிய நதி பரந்து அகன் பணை மருங்கில் 1100-1
கனை நெடும் புனல் நிறைந்து திண் கரைப் பெரும் குளங்கள் 1100-2
புனை இருங்கடி மதகுவாய் திறந்திடப் புறம் போய் 1100-3
வினைஞர் ஆர்ப்பு ஒலி எடுப்ப நீர் வழங்குவ வியன்கால் 1100-4

24. மாறு இல் வண் பகட்டு ஏர் பல நெருங்கிட வயல்கள் 1101-1
சேறு செய்பவர் செந்நெலின் வெண் முளை சிதறி 1101-2
நாறு வார்ப்பவர் பறிப்பவர் நடுபவர் ஆன 1101-3
வேறு பல் வினை உடைப் பெரும் கம்பலை மிகும் ஆல் 1101-4

25. வரும் புனல் பெரும் கால்களை மறித்திட வாளை 1102-1
பெரும் குலைப்பட விலங்குவ பிறங்கு நீர்ப் பழனம் 1102-2
நெருங்கு சேல் குலம் உயர்த்துவ நீள் கரைப் படுத்துச் 1102-3
சுருங்கை நீர் வழக்கு அறுப்பன பரு வரால் தொகுதி 1102-4

26. தளைத்த தடம் பணை எழுந்த செந்தாமரைத் தவிசின் 1103-1
இளைத்த சூல் வளை கண் படுப்பன இடை எங்கும் 1103-2
விளைத்த பாசொளி விளங்கு நீள் விசும்பு இடை ஊர் கோள் 1103-3
வளைந்த மா மதி போன்று உள மருத நீர் வைப்பு 1103-4

27. ஓங்கு செம் நெலின் புடையன உயர் கழைக் கரும்பு 1104-1
பூம் கரும்பு அயல் மிடைவன பூகம் அப்பூகப் 1104-2
பாங்கு நீள் குலைத் தெங்கு பைம் கதலி வண் பலவு 1104-3
தூங்கு தீம் கனிச் சூத நீள் வேலிய சோலை 1104-4

28. நீடு தண் பணை உடுத்த நீள் மருங்கின நெல்லின் 1105-1
கூடு துன்றிய இருக்கைய விருந்து எதிர் கொள்ளும் 1105-2
பீடு தங்கிய பெருங் குடி மனை அறம் பிறங்கும் 1105-3
மாடம் ஓங்கிய மறுகின மல்லல் மூது ஊர்கள் 1105-4

29. தொல்லை நான்மறை முதல் பெரும் கலை ஒலி துவன்றி 1106-1
இல்லறம் புரிந்து ஆகுதி வேள்வியில் எழுந்த 1106-2
மல்கு தண் புகை மழை தரும் முகில் குலம் பரப்பும் 1106-3
செல்வம் ஓங்கிய திருமறையவர் செழும் பதிகள் 1106-4

30. தீது நீங்கிடத் தீக் கலியாம் அவுணற்கு 1107-1
நதர் தாம் அருள் புரிந்தது நல்வினைப் பயன் செய் 1107-2
மாதர் தோன்றிய மரபு உடை மறையவர் வல்லம் 1107-3
பூதி சாதனம் போற்றிய பொற்பினால் விளங்கும் 1107-4

31. அருவி தந்த செம் மணிகளும் புறவில் ஆய் மலரும் 1108-1
பருவி ஓடைகள் நிறைந்து இழி பாலியின் கரையின் 1108-2

மருவு கங்கை வாழ் சடையவர் மகிழ்ந்த மால் பேறாம் 1108-3
பொருவில் கோயிலும் சூழ்ந்த அப் பூம்பணை மருதம் 1108-4

32. விரும்பு மேன்மை என் பகர்வது விரி திரை நதிகள் 1109-1
அரும் கரைப் பயில் சிவ ஆலயம் அனேகமும் அணைந்து 1109-2
பரும் கை யானையை உரித்தவர் இருந்த அப் பாசூர் 1109-3
மருங்கு சூழ் தவம் புரிந்தது அன்றோ மற்ற மருதம் 1109-4

33. பூ மரும் புனல் வயல் களம் பாடிய பொருநர் 1110-1
தாம் அரும் கிளையுடன் தட மென் மலர் மிலைந்து 1110-2
மா மருங்கு தண் நீழலின் மருத யாழ் முரலும் 1110-3
காமர் தண் பணைப் புறத்தது கரும் கழி நெய்தல் 1110-4

34. தூய வெண் துறைப் பரதவர் தொடுப்பன வலைகள் 1111-1
சேய நீள் விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி 1111-2
ஆய பேர் அளத் தளவர்கள் அளப்பன உப்பு 1111-3
சாயன் மெல் விடை அளத்தியர் அளப்பன தரளம் 1111-4

35. கொடு வினைத் தொழில் நுளையர்கள் கொடுப்பன கொழுமீன் 1112-1
படு மணற் கரை நுளச்சியர் கொடுப்பன பவளம் 1112-2
தொடு கடல் சங்கு துறையவர் குளிப்பன அவர் தம் 1112-3
வடு வகிர்க் கண் மங்கையர் குளிப்பன மணல் கேணி 1112-4

36. கழிப் புனல் கடல் ஓதம் முன் சூழ்ந்து கொண்டு அணிய 1113-1
வழிக் கரைப் பொதி பொன் அவிழ்ப்பன மலர்ப் புன்னை 1113-2
விழிக்கும் நெய்தலின் விரை மலர்க் கண் சுரும்பு உண்ணக் 1113-3
கழிக்கரைப் பொதி சோறு அவிழ்ப்பன மடல் கைதை 1113-4

37. கயல் வண் கரைப் புரை நெறி அடைப்பன கனி முள் 1114-1
சேய தண் நறும் செழு முகை செறியும் முண்டகங்கள் 1114-2
ஆய நுண் மணல் வெண்மையை மறைப்பன அன்னம் 1114-3
தாய முன் துறைச் சூழல் சூழ் ஞாழலின் தாது 1114-4

38. வாம் பெரும் திரைவளாக முன் குடி பயில் வரைப்பில் 1115-1
தாம் பரப்பிய கயல்களின் விழிக் கயல் தவிரக் 1115-2
காம்பி நேர் வரும் தோளியர் கழிக் கயல் விலை செய் 1115-3
தேம் பொதிந்த சில் மழலை மென் மொழிய செவ்வழி யாழ் 1115-4

39. மருள் கொடும் தொழில் மன்னவன் இறக்கிய வரியை 1116-1
நெருக்கி முன் திருவொற்றியூர் நீங்க என்று எழுதும் 1116-2
ஒருத்தர் தம் பெரும் கோயிலின் ஒரு புறம் சூழ்ந்த 1116-3
திருப் பரப்பையும் உடைய அத் திரைக் கடல் வரைப்பு 1116-4

40. மெய் தரும் புகழ்த் திரு மயிலா புரி விரை சூழ் 1117-1
மொய் தயங்கு தண் பொழில் திருவான்மியூர் முதலாப் 1117-2
பை தரும் பணி அணிந்தவர் பதி எனைப் பலவால் 1117-3
நெய்தல் எய்த முன் செய்த அம் நிறை தவம் சிறிதோ 1117-4

41. கோடு கொண்டு எழும் திரைக் கடல் பவள மென் கொழுந்து 1118-1
மாடு மொய் வரைச் சந்தனச் சினை மிசை வளரும் 1118-2
நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பல ஆல் 1118-3
ஆடு நீள் கொடி மாட மா மல்லையே அனைய 1118-4

42. மலை விழிப்பன என வயல் சேவல் வரைப் பாறைத் 1119-1
தலையுகைப்பவும் தளைச் செறு விடை நெடுங் கருமான் 1119-2
குதிப்பன கரும் பகட்டு ஏர் நிகர்ப்பவுமாய் 1119-3
அலை புனல் பணை குறிஞ்சியோடு அனைவன அனேகம் 1119-4

43. புணர்ந்த ஆன் நிரை புற விடைக் குறு முயல் பொருப்பின் 1120-1
அணைந்த வான் மதி முயலினை இனம் என அணைந்து 1120-2
மணம் கொள் கொல்லையில் வரகு போர் மஞ்சனம் வரைக்கார் 1120-3
இணைந்து முல்லையும் குறிஞ்சியும் கலப்பன எங்கும் 1120-4

44. கவரும் மீன் குவை கழியவர் கானவர்க்கு அளித்து 1121-1
சிவலும் சேவலும் மாறியும் சிறு கிழிச்சியர்கள் 1121-2
அவரை ஏனலுக்கு எயிற்றியர் பவள முத்து அளந்தும் 1121-3
உவரி நெய்தலும் கானமும் கலந்து உள ஒழுக்கம் 1121-4

45. அயல் நறும் புறவினில் இடைச்சியர் அணி நடையும் 1122-1
வியன் நெடும் பணை உழத்தியர் சாயலும் விரும்பி 1122-2
இயலும் அன்னமும் தோகையும் எதிர் எதிர் பயில 1122-3
வயலும் முல்லையும் இயைவன பல உள மருங்கு 1122-4

46. மீளும் ஓதம் முன் கொழித்த வெண் தரளமும் கமுகின் 1123-1
பாளை உக்கவும் விரவலில் பரத்தியர் பணை மென் 1123-2
தோளும் உழத்தியர் மகளிர் மாறு ஆடி முன் தொகுக்கும் 1123-3
நீளும் நெய்தலும் மருதமும் கலந்து உள நிலங்கள் 1123-4

47. ஆய நானிலத்து அமைதியில் தத்தமக்கு அடுத்த 1124-1
மேய செய் தொழில் வேறு பல் குலங்களின் விளங்கித் 1124-2
தீய என்பன கனவிலும் நினைவு இலாச் சிந்தைத் 1124-3
தூய மாந்தர் வாழ் தொண்டை நாட்டு இயல்பு சொல் வரைத்ததோ 1124-4

48. இவ் வளம் தரு பெரும் திரு நட்டு இடை என்றும் 1125-1
மெய் வளம் தரு சிறப்பினால் உலகெலாம் வியப்ப 1125-2
எவ் உகங்களும் உள்ளது என்று யாவரும் ஏத்தும் 1125-3
கை விளங்கிய நிலையது காஞ்சி மா நகரம் 1125-4

49. ஆன தொல் நகர் அம்பிகை தம் பெருமானை 1126-1
மான அர்ச்சனை யால் ஒரு காலத்து வழிபட்டு 1126-2
ஊனம் இல் அறம் அனேகமும் உலகு உய்ய வைத்த 1126-3
மேன்மை பூண்ட அப் பெருமை அறிந்தவா விளம்பில் 1126-4

50. வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்று இருந்து அருளித் 1127-1
துள்ளு வார் புனல் வேணியர் அருள் செயத் தொழுது 1127-2
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறன் எலாம் தெரிய 1127-3
உள்ளவாறு கேட்டு அருளினான் உலகை ஆள் உடையாள் 1127-4

51. எண் இல் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் 1128-1
உண்மை ஆவது பூசனை என உரைத்து அருள 1128-2
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள் 1128-3
பெண்ணின் நல்லவள் ஆயின பெருந் தவக் கொழுந்து 1128-4

52. நங்கை உள் நிறை காதலை நோக்கி நாயகன் திரு உள்ளத்து மகிழ்ந்தே 1129-1
அம் கண் எய்திய முறுவலும் தோன்ற அடுத்தது என் கொல் நின் பால் என வினவ
1129-2
இங்கு நாத நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
1129-3
பொங்குகின்றது என் ஆசை என்று இறைஞ்சி போகம் ஆர்த்த பூண் முலையினாள் போற்ற
1129-4

53. தேவ தேவனும் அது திரு உள்ளம் செய்து தென் திசை மிக்க செய் தவத்தால்
1130-1
யாவரும் தனை அடைவது மண் மேல் என்றும் உள்ளது காஞ்சி மற்று அதனுள்
1130-2
மா அமர்ந்த நம் இருக்கையில் அணைந்து மன்னு பூசனை மகிழ்ந்து செய்வாய் என்று

1130-3
ஏவ எம் பெருமாட்டியும் பிரியா இசைவு கொண்டு எழுந்து அருளுதற்கு இசைந்தாள்
1130-4

54. ஏதம் இல் பல யோனி எண் பத்து நான்கு நூறு ஆயிரத்து அதனுள் 1131-1
பேதமும் புரந்து அருளும் அக் கருணைப் பிரான் மொழிந்த ஆகம வழி பேணிப்
1131-2
போது நீர்மையில் தொழுதனள் போதப் பொருப்பில் வேந்தனும் விருப்பில் வந்து எய்தி
1131-3
மா தவம் புரிந்து அருளுதற்கு அமைந்த வளத்தொடும் பரிசனங்களை விடுத்தான்
1131-4

55. துன்னு பல்லுயிர் வானவர் முதலாச் சூழ்ந்து உடன் செலக் காஞ்சியில் அணையத்
1132-1
தன்னை நேர் வரும் பதும மா நாகம் தம்பிராட்டி தாள் தலைமிசை வைத்தே 1132-2
அன்னையாய் உலகு அனைத்தையும் ஈன்றாய் அடியனேன் உறை பிலம் அதன் இடையே
1132-3
மன்னு கோயில் கொண்டு அருளுவாய் என்ன மலை மடந்தை மற்று அதற்கு அருள் புரிந்து
1132-4

56. அங்கு மண் உலகத்து உயிர் தழைப்ப அளவில் இன்பத்தின் அருட் கரு விருத்தித்
1133-1
திங்கள் தங்கிய புரி சடையார்க்குத் திருந்து பூசனை விரும்பினள் செய்ய 1133-2
எங்கும் நாடவும் திரு விளையாட்டால் ஏக மா முதல் எதிர்ப்படாது ஒழியப் 1133-3
பொங்கு மா தவம் செய்து காண்பதற்கே புரிவு செய்தனள் பொன் மலை வல்லி 1133-4

57. நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி நிரந்தரம் திரு வாக்கினில் நிகழ்வது
1134-1
அஞ்சு எழுத்துமே ஆக ஆன் உடை அம்மை செம்மலர்க் கை குவித்து அருளித்
1134-2
தஞ்சம் ஆகிய அரும் தவம் புரியத் தரிப்பரே அவள் தனிப் பெரும் கணவர் 1134-3
வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தில் வந்து தோன்றினார் மலை மகள் காண 1134-4

58. கண்ட போதில் அப் பெரும் தவப் பயன் ஆம் கம்பம் மேவிய தம் பெருமானை
1135-1
வண்டு உலாங் குழல் கற்றை முன் தாழ வணங்கி வந்து எழும் ஆசை முன் பொங்கக்
1135-2
கொண்ட காதலின் விருப்பு அளவு இன்றிக் குறித்த பூசனை கொள்கை மேற் கொண்டு
1135-3
தொண்டை அம் கனி வாய் உமை நங்கை தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள்
1135-4

59. உம்பர் நாயகர் பூசனைக்கு அவர் தாம் உரைத்த ஆகமத்து உண்மையே தலை நின்று
1136-1
எம் பிராட்டி அர்ச்சனை புரிவதனுக்கு இயல்பில் வாழ் திருச் சேடியர் ஆன 1136-2
கொம்பனார்கள் பூம் பிடகை கொண்டு அணையக் குலவு மென் தளிர் அடி இணை ஒதுங்கி
1136-3
அம்பி காவனம் ஆம் திரு வனத்தில் ஆன தூ நறும் புது மலர் கொய்தாள் 1136-4

60. கொய்த பன்மலர் கம்பை மா நதியில் குலவு மஞ்சனம் நிலவு மெய்ப் பூச 1137-1
நெய் தரும் கொழும் தூப தீபங்கள் நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின் 1137-2
மெய் தரும்படி வேண்டின எல்லாம் வேண்டும் போதினில் உதவ மெய்ப் பூச 1137-3
எய்த ஆகம விதி எலாம் செய்தாள் உயிர்கள் யாவையும் ஈன்ற எம் பிராட்டி 1137-4

61. கரந்த அரும் பயன் இது என உணர்ந்து கம்பம் மேவிய உம்பர் நாயகர்பால்
1138-1
நிரந்த காதல் செய் உள்ளத்தள் ஆகி நீடு நன்மைகள் யாவையும் பெருக 1138-2
வரம் தரும் பொருளாம் மலை வல்லி மாறு இலா வகை மலர்ந்த பேர் அன்பால் 1138-3

சிரம் பணிந்து எழு பூசை நாள் தோறும் திரு உளம் கொளப் பெருகியது அன்றே 1138-4

62. நாதரும் பெரு விருப்பு ஒடு நயந்து நங்கை அர்ச்சனை செய்யும் அப்பொழுதில் 1139-1
காதல் மிக்க ஓர் திரு விளையாட்டில் கனம் குழைக்கு அருள் புரிந்திட வேண்டி 1139-2
ஓத மார் கடல் ஏழும் ஒன்று ஆகி ஓங்கி வானமும் உட்படப் பரந்து 1139-3
மீது செல்வது போல் வரக் கம்பை வெள்ளம் ஆம் திரு உள்ளமும் செய்தார் 1139-4

63. அண்ணலார் அருள் வெள்ளத்தை நோக்கி அம் கயல் கண்ணி தம் பெருமான் மேல் 1140-1
விண் எலாம் கொள வரும் பெரு வெள்ளம் மீது வந்து உறும் என வெருக் கொண்டே 1140-2
உண் நிலாவிய பதைப்பு உறு காதலுடன் திருக் கையால் தடுத்தும் நில்லாமை 1140-3
தண் நிலா மலர் வேணியினாரைத் தழுவி கொண்டனள் தன்னையே ஒப்பாள் 1140-4

64. மலைக் குலக் கொடி பரிவு உறு பயத்தால் மாவின் மேவிய தேவ நாயகரை 1141-1
முலைக் குவட்டொடு வளைக் கையால் நெருக்கி முறுகு காதலால் இறுகிடத் தழுவச் 1141-2
சிலைத் தனித் திருநுதல் திரு முலைக்கும் செம் தளிர்க் கரங்களுக்கும் மெத் எனவே 1141-3
கொலைக் களிற்று புரி புனைந்த தம் மேனி குழைந்து காட்டினார் விழைந்த கொள்கையினார் 1141-4

65. கம்பர் காதலி தழுவ மெய் குழைய கண்டு நிற்பவும் சரிப்பவும் ஆன 1142-1
உம்பரே முதல் யோனிகள் எல்லாம் உயிரும் யாக்கையும் உருகி ஒன்றாகி 1142-2
எம் பிராட்டிக்கு மெல்லியர் ஆனார் என்றும் ஏகம்பர் என்று எடுத்து ஏத்த 1142-3
வம்பு உலாம் மலர் நிறைய விண் பொழியக் கம்பை ஆறு முன் வணங்கியது அன்றே 1142-4

66. பூதி ஆகிய புனித நீர் ஆடிப் பொங்கு கங்கை தோய் முடிச் சடை புனைந்து 1143-1
காதில் வெண் குழை கண்டிகை தாழக் கலந்த யோகத்தின் மருவிய கருத்தால் 1143-2
ஆதி தேவனார் ஆய் உமா தவம் செய் அவ் வரங்கொலோ அகிலம் ஈன்று அளித்த 1143-3
மாது மெய்ப் பயன் கொடுப்பவே கொண்டு வளைத் தழும்புடன் முலைச் சுவடு அணிந்தார் 1143-4

67. கோது இலா அமுது அனையவள் முலைக் குழைந்த தம் மணவாள நல் கோலம் 1144-1
மாது வாழவே காட்டி முன் நின்று வரங்கள் வேண்டுவ கொள்க என்று அருள 1144-2
வேத காரணர் ஆய ஏகம்பர் விரை மலர்ச் செய்ய தாமரை கழல் கீழ் 1144-3
ஏதம் நீங்கிய பூசனை முடிந்த தின்மை தான் அறிவிப்பதற்கு இறைஞ்சி 1144-4

68. அண்டர் நாயகர் எதிர் நின்று கூறும் அளவினால் அஞ்சி அஞ்சலி கூப்பிக் 1145-1
கொண்ட இற்றை என் பூசனை இன்னும் குறை நிரம்பிடக் கொள்க என்று அருள 1145-2
வண்டு வார் குழல் மலை மகள் கமல வதனம் நோக்கி அம் மலர்க் கண் நெற்றியின் மேல் 1145-3
முண்ட நீற்றர் நின் பூசனை என்றும் முடிவதில்லை நம் பால் என மொழிய 1145-4

69. மாறு இலாத இப் பூசனை என்றும் மன்ன எம்பிரான் மகிழ்ந்து கொண்டு அருளி
1146-1
ஈறு இலாத இப்பதியின் உள் எல்லா அறமும் யான் செய அருள் செய வேண்டும்
1146-2
வேறு செய் வினை திருவடிப் பிழைத்தல் ஒழிய இங்கு உளார் வேண்டின செயினும்
1146-3
பேறு மாதவப் பயன் கொடுத்து அருளப் பெறவும் வேண்டும் என்றனள் பிறப்பு ஒழிப்பாள்
1146-4

70. விடையின் மேலவர் மலைமகள் வேண்ட விரும்பு மேவி வீற்று இருந்தே 1147-1
இடை அறா அறம் வளர்க்கும் வித்து ஆக இக பர திரு நாழி நெல் அளித்துக்
1147-2
கடையர் ஆகியும் உயர்ந்தவர் ஆகியும் காஞ்சி வாழ்பவர் தாம் செய் தீவினையும்
1147-3
தடைபடாது மெய்ந் நெறி அடைவதற்கு ஆம் தவங்களாகவும் உவந்து அருள் செய்தார்
1147-4

71. எண்ண அரும் பெரும் வரங்கள் முன் பெற்ற அங்கு எம் பிராட்டி தம்பிரான் மகிழ்ந்து அருள
1148-1
மண்ணின் மேல் வழிபாடு செய்து அருளி மனை அறம் பெருக்கும் கருணையினால்
1148-2
நண்ணும் மன் உயிர் யாவையும் பல்க நாடு காதலின் நீடிய வாழ்க்கைப் 1148-3
புண்ணிய திருக் காம கோட்டத்துப் பொலிய முப்பதோடு இரண்டு அறம் புரக்கும்
1148-4

72. அலகு இல் நீள் தவத்து அறப் பெரும் செல்வி அண்டம் ஆம் திரு மனைக்கு இடும் தீபம்
1149-1
உலகில் வந்து உறு பயன் அறிவிக்க ஓங்கும் நாள் மலர் மூன்றுடன் ஒன்று 1149-2
நிலவ ஆண்டினுக்கு ஒரு முறை செய்யும் நீடு தொன்மையால் நிறந்த பேர் உலகம்
1149-3
மலர் பெரும் திருக் காம கோட்டத்து வைத்த நல் அறம் மன்னவே மன்னும் 1149-4

73. தீங்கு தீர்க்கும் நல் தீர்த்தங்கள் போற்றும் சிறப்பினால் திருக் காமக் கோட்டத்தின்
1150-1
பாங்கு மூன்று உலகத்தில் உள்ளோரும் பரவு தீர்த்தம் ஆம் பைம் புனல் கேணி
1150-2
வாங்கு தெண் திரை வேல்கை மேகலை சூழ் வையகம் தனக்கு எய்திய படியாய்
1150-3
ஓங்கு தன் வடிவாய் நிகழ்ந்து என்றும் உள்ளது ஒன்று உலகாணி என்று உளது ஆல்
1150-4

74. அந்தம் இன்றி நல் அறம் புரிந்து அளிக்கும் அன்னை தன் திருக் காமக் கோட்டத்தில்
1151-1
வந்து சந்திர சூரியர் மீது வழிக் கொள்ளாத தன் மருங்கு போலின் ஆல் 1151-2
சந்த மாதிரம் மயங்கி எம் மருங்கும் சாயை மாறிய தன் திசை மயக்கும் 1151-3
இந்த மாநிலத்தவர் எலாம் காண என்றும் உள்ளது ஒன்று இன்றும் அங்கு உளது ஆல்
1151-4

75. கன்னி நல் நெடும் காப்பு உடை வரைப்பு இல் காஞ்சி ஆம் திரு நதிக் கரை மருங்கு
1152-1
சென்னியில் பிறை அணிந்தவர் விரும்பும் திருப் பெரும் பெயர் இருக்கையில் திகழ்ந்து
1152-2
மன்னு வெம் கதிர் மீது எழும் போதும் மறித்து மேற் கடல் தலை விழும் போதும்
1152-3
தன் நிழல் பிரியாத வண் காஞ்சித் தானம் மேவிய மேன்மையும் உடைத்தால் 1152-4

76. மறைகளால் துதித்து அரும் தவம் புரிந்து மாறு இலா நியமம் தலை நின்று
1153-1
முறைமையால் வரும் பூசனை செய்ய முனிவர் வானவர் முதல் உயிர் எல்லாம் 1153-2
நிறையும் அன்பினால் அர்ச்சனை செய்ய நீடு ஆகமங்கள் அவர் அவர்க்கு அருளி
1153-3
இறைவர் தாம் மகிழ்ந்து அருளிய பதிகள் எண் இறந்த அத் திரு நகர் எல்லை
1153-4

77. மன்னு கின்ற அத் திருநகர் வரைப் பின் மண்ணில் மிக்கது ஓர் நன்மை யினாலே
1154-1
துன்னும் யானையை அத் தூற்றில் வாழ் முயல் முன் துரக்க எய்திய தொலைவு இல் ஊக்கத்தால்
1154-2
தன்னிலத்து நின்று அகற்றுதல் செய்யும் தானம் அன்றியும் தனு எழும் தரணி 1154-3
எந் நிலைத்தினும் காண்பரும் இறவாத் தானம் என்று இவை இயல்பினில் உடைத்தால்
1154-4

78. ஈண்டு தீவினை யாவையும் நீக்கி இன்பமே தரும் புண்ணிய தீர்த்தம் 1155-1
வேண்டினார் தமக்கு இட்ட சித்தியதாய் விளங்கு தீர்த்தம் நல் மங்கள தீர்த்தம்
1155-2
நீண்ட காப்பு உடைத் தீர்த்தம் மூன்று உலகில் நிகழ்ந்த சாருவ தீர்த்தமும் முதலா
1155-3
ஆண்டு நீடிய தீர்த்தம் எண்ணிலவும் அமரர் நாட்டவர் ஆடுதல் ஒழியார் 1155-4

79. தாள் அது ஒன்றினில் மூன்று பூ மலரும் தமனியச் செழும் தாமரைத் தடமும்
1156-1
நீள வார் புனல் குடதிசை ஓடி நீர் கரக்கு மா நதியுடன் நீடு 1156-2
நாள் அலர்ந்து செம் குவளை பைங் கமலம் நண்பகல் பகல் தரும் பாடலம் அன்றிக்
1156-3
காள மேகம் ஒப்பாள் உறை வரைப்பில் கண் படாத காயாப் புளி உளதால் 1156-4

80. சாயை முன் பிணிக்கும் கிணறு ஒன்று தஞ்சம் உண்ணின் நஞ்சு ஆம் தடம் ஒன்று
1157-1
மாயை இன்றி வந்து உள் அடைந்தார்கள் வானரத்து உருவாம் பிலம் ஒன்று 1157-2
மேய அவ் உரு நீங்கிடக் குளிக்கும் விளங்க பொய்கையும் ஒன்று விண்ணவரோடு
1157-3
ஆய இன்பம் உய்க்கும் பிலம் ஒன்றோடு அனைய ஆகிய அதிசயம் பலவால் 1157-4

81. அஞ்சு வான் கரத்து ஆறு இழி மதத்து ஓர் ஆனை நிற்கவும் அரை இருள் திரியும்
1158-1
மஞ்சு நீள்வது போலும் மா மேனி மலர்ப் பதங்களில் வண் சிலம்பு ஒலிப்ப 1158-2
நஞ்சு பில்க எயிற்று அரவ வெற்றுத் தரையின் நாமம் மூன்று இலை படை உடைப் பிள்ளை
1158-3
எஞ்சல் இன்றி முன் திரியவும் குன்றம் எறிந்த வேலவன் காக்கவும் இசையும் 1158-4

82. சத்தி தற் பரசித்தி யோகிகளும் சாதகத் தனி தலைவரும் முதலா 1159-1
நித்தம் எய்திய ஆயுள் மெய்த் தவர்கள் நீடுவாழ் திருப் பாடியும் அனேகம் 1159-2
சித்தர் விஞ்சையர் இயக்கர் கந்தருவர் திகழ்ந்து மன்னுவார் செண்டுகை ஏந்தி
1159-3
வித்தகக் கரி மேற் கொளும் காரி மேவும் செண்டு அணை வெளியும் ஒன்று உளது ஆல்
1159-4

83. வந்து அடைந்தவர் தம் உரு மாய மற்று உளாரைத் தாம் காண்பிடம் உளது
1160-1
சிந்தை யோகத்து முனிவர் யோகினிகள் சேரும் யோக பீடமும் உளது என்றும்
1160-2
அந்தம் இல் அறம் புரப்பவள் கோயில் ஆன போக பீடமும் உளதாகும் 1160-3
எந்தையார் மகிழ் காஞ்சி நீடு எல்லை எல்லை இல்லன உள்ள ஆர் அறிவார் 1160-4

84. தூண்டு சோதி ஒன்று எழுந்து இருள் துரக்கும் சுரர்கள் வந்து சூழ் உருத்திர சோலை
1161-1
வேண்டினார்கள் தம் பிறப்பினை ஒழிக்கும் மெய்ந் நெறிக் கண் நின்றார்கள் தாம் விரும்பித்
1161-2
தீண்டில் யாவையும் செம் பொன் ஆக்குவது ஓர் சிலையும் உண்டு உரை செய்வதற்கு அரிதால்
1161-3
ஆண்ட நாயகி சமயங்கள் ஆறும் அகில யோனியும் அளிக்கும் அந் நகரம் 1161-4

85. என்றும் உள்ள இந் நகர் கலியுகத்தில் இலங்கு வேல் கரிகால் பெருவளத்தோன்
1162-1
வன் திறல் புலி இமயமால் வரை மேல் வைக்க ஏகுவேன் தனக்கு இதன் வளமை
1162-2
சென்று வேடன் முன் கண்டு உரை செய்யது இருந்து காத நான்கு உட்பட வகுத்துக்
1162-3
குன்று போலும் மா மதில் புடை போக்கிக் குடி இருத்தின கொள்கையின் விளங்கும்
1162-4

86. தண் காஞ்சி மென் சினைப் பூம் கொம்பர் ஆடல் சார்ந்து அசைய அதன் மருங்கு சுரும்பு
தாழ்ந்து 1163-1
பண் காஞ்சி இசை பாடும் பழன வேலிப் பணை மருதம் புடை உடைத்தாய்ப் பாரில் நீடும்
1163-2
திண் காஞ்சி நகர் நொச்சி இஞ்சி சூழ்ந்த செழும் கிடங்கு திரு மறைகள் ஒலிக்கும் தெய்வ
1163-3
வண் காஞ்சி அல்குல் மலை வல்லி காக்க வளர் கருணைக் கடல் உலகம் சூழ்ந்தால் மானும்
1163-4

87. கொந்தலர் பூம் குழல் இமயக் கொம்பு கம்பர் கொள்ளும் பூசனைக் குறித்த தானம் காக்க
1164-1
மந்திர மா மதில் அகழி அவர் தாம் தந்த வாய்மை ஆகம விதியின் வகுப்புப் போலும்
1164-2
அந்தம் இல் சீர்க் காஞ்சியை வந்து அடைந்தார்க்கு அன்றி அடைகளங்கம் அறுப்பர் என்று
அறிந்து சூழ 1164-3
வந்து அணைந்து தன் கறுப்பும் உவர்ப்பும் நீக்கும் மா கடலும் போலும் மலர்க் கிடங்கு மாதோ
1164-4

88. ஆங்கு வளர் எயிலின் உடன் விளங்கும் வாயில் அப்பதியில் வாழ் பெரியோர் உள்ளம் போல
1165-1
ஓங்கு நிலைத் தன்மையவாய் அகிலம் உய்ய உமைபாகர் அருள் செய்த ஒழுக்கம் அல்லால்
1165-2
தீங்கு நெறி அடையாத தடையும் ஆகிச்செல் நெறிக்கண் நிகழ் வாய்மை திருந்து மார்க்கம்
1165-3
தாம் குலவ நிலவி வளர் ஒளியால் என்றும் தட நெடுவான் அளப்பன வாம் தகைய வாகும்
1165-4

89. மாறு பெறல் அரும் கனக மாடம் நீடு மணி மறுகும் நெடும் தெருவும் வளத்தில் வந்த
1166-1
ஆறு பயில் ஆவண வீதிகளும் மற்றும் அமைந்த நகர் அணி வரைகள் நடுவு போக்கிக்
1166-2
கூறுபடு நவ கண்டம் அன்றி மல்கக் கொண்ட அனேகம் கண்டம் ஆகி அன்ன
1166-3

வேறு ஒரு மண் உலகு தனில் உளதாம் என்ன விளங்கிய மா லோக நிலை மேவிற்று அன்றே
1166-4

90. பாகம் மருங்கு இரு புடையும் உயர்ந்து நீண்ட படர் ஒளி மாளிகை நிரைகள் பயில் மென் கூந்தல் 1167-1
தோகையர் தம் குழாம் அலையத் தூக்கு முத்தின் சுடர்க் கோவைக் குளிர் நீர்மை துதைந்த வீதி
1167-2
மாகம் இடை ஒளி தழைப்ப மன்னி நீடு மருங்கு தாரகை அலைய வரம்பில் வண்ண
1167-3
மேகம் இடை கிழித்து ஒழுகும் தெய்வக் கங்கை மேல் நதிகள் பல மண் மேல் விளங்கி ஒக்கும்
1167-4

91. கிளர் ஒளிச் செம் கனக மயம் தான் ஆய் மாடு கீழ் நிலையோர் நீலச் சோபனம் பூணக்
1168-1
கொள அமைத்து மீது ஒருபால் அன்ன சாலை குல வயிரத்தால் அமைத்த கொள்கையாலே
1168-2
அளவு இல் சுடரப் பிழம்பு ஆனார் தம்மைத் தேடி அகழ்ந்து ஏனம் ஆனான் உம் அன்னம் ஆகி
1168-3
வளர் விசும்பில் எழுந்தானும் போல நீடு மாளிகையும் உள மற்று மறுகு தோறும்
1168-4

92. மின் பொலி பன் மணி மிடைந்த தவள மாடம் மிசைப் பயில் சந்திர காந்தம் விசும்பின் மீது
1169-1
பொன் புரையும் செக்கர் நிறப் பொழுது தோன்றும் புனிற்றி மதி கண்டு உருகிப் பொழிந்த நீரால்
1169-2
வன் புலியின் உரி ஆடைத் திரு ஏகம்பர் வளர்சடையும் இளம் பிறையும் கண்டு கும்பிட்டு
1169-3
அன்பு உருகி மெய் பொழியக் கண்ணீர் வாரும் அடியவரும் அனைய உள அலகிலாத
1169-4

93. முகில் உரிஞ்சும் கொடி தொடுத்த முடிய ஆகும் முழுப் பளிங்கின் மாளிகைகள் முற்றும் சுற்றும் 1170-1
நிகரில் சரா சரங்கள் எல்லாம் நிழலினாலே நிறைதலின் ஆல் நிறை தவம் செய் இமயப் பாவை
1170-2
நகில் உழுத சுவடும் வளைத் தழும்பும் பூண்ட நாயகனார் நான்கு முகற்குப் படைக்க நல்கும்
1170-3
அலகில் யோனிகள் எல்லாம் அமைத்து வைத்த அரும் பெரும் பண்டார நிலை அனைய ஆகும்
1170-4

94. பொன் களப மாளிகை மேல் முன்றில் நின்று பூம் கழங்கு மணிப் பந்தும் போற்றி ஆடும்
1171-1
வில் புருவக் கொடி மடவார் கலன்கள் சிந்தி விழுவனவும் கெழுவு துணை மேவு மாதர்
1171-2
அற்பு முதிர் கலவியினில் பரிந்து சிந்தும் அணிமணி சேடியர் தொகுக்கும் அவையும் ஆகி
1171-3
நல் கனக மழை அன்றிக் காஞ்சி எல்லை நவமணி மாரியும் பொழியும் நாளும் நாளும்
1171-4

95. பூ மகளுக்கு உறையுள் எனும் தகைய ஆன பொன் மாடத் தரமியங்கள் பொலிய நின்று
1172-1
மா மகரக் குழை மகளிர் மைந்தர் அம் கண் வந்து ஏறுமுன் நறு நீர் வண்டல் ஆடத்
1172-2
தூமணிப் பொன் புனை நாளத்துருத்தி வீசும் சுடர்விடு செம் குங்கும நீர்த் துவலை தோய்ந்த
1172-3
காமர் மணி நாசிகையின் மருங்கு தங்கும் கரு முகில்கள் செம் முகில் களாகிக் காட்டும்
1172-4

96. இமம் மலிய எடுத்த நெடு வரைகள் போல இலங்கு சுதைத் தவள மாளிகை நீள் கோட்டுச்
1173-1
சிமை அடையும் சோபான நிரையும் விண்ணும் தெரிவு அரிய தூய்மையினால் அவற்றுள் சேர்ந்து
1173-2
தமர் களுடன் இழிந்து ஏறும் மைந்தர் மாதர் தங்களையும் விசும்பு இடை நின்று இழியா நிற்கும்
1173-3
அமரரையும் அரமகளிர் தமையும் வெவ்வேறு அறிவரிதாம் தகைமையன அனேகம் அம் கண்
1173-4

97. அரவ நெடும் தேர் வீதி அருகு மாடத்து அணிமணிக் கோபுரத்து அயலே வியல் வாய் நீண்ட
1174-1
விரவு மரகதச் சோதி வேதித் திண்ணை விளிம்பின் ஒளி துளும்பு முறைப் படி மீது ஏறும்
1174-2
குரவலரும் குழல் மடவார் அடியில் ஊட்டும் குழம்பு அடுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்
1174-3
பரவை நெடும் தரங்கம் மிசை விளங்கித் தோன்றும் பவள நறும் தளிர் அனைய பலவும் பரங்கர்
1174-4

98. வெம்பு சினக் களிற்று அதிர்வும் மாவின் ஆர்ப்பும் வியன் நெடும் தேர்க் கால் இசைப்பும் விழவு
அறாத 1175-1
அம் பொன் மணி வீதிகளில் அரங்கில் ஆடும் அரிவையர் நூபுர ஒலியோடு அமையும் இம்பர்
1175-2
உம்பரின் இந்திரன் களிற்றின் முழக்கும் தெய்வ உயர் இரவி மாக் கலிப்பும் அயன் ஊர்தித் தேர்
1175-3
பம்பிசையும் விமானத்துள் ஆடும் தெய்வப் பாவையர் நூபுர அரவத்துடனே பல்கும்
1175-4

99. அருமறை அந்தணர் மன்னும் இருக்கை ஆன ஆகுதியின் புகை அடுத்த அம் பொன் மாடப்
1176-1
பெரு மறுகு தொறும் வேள்விச் சாலை எங்கும் பெறும் அவிப் பாகம் கொடுக்கும் பெற்றி மேலோர் 1176-2
வருமுறைமை அழைத்து விடு மந்திரம் எம் மருங்கும் வானவர் நாயகர் திரு ஏகம்பர் முன்றில்
1176-3
திருமலி பொன் கோபுரத்து நெருங்கும் எல்லாத் தேவரையும் அணித்தாகக் கொண்டு செல்லும்
1176-4

100. அரசர் குலப் பெரும் தெருவும் தெற்றி முற்றத்து ஆயுதங்கள் பயிலும் வியல் இடமும் அம்கண்
1177-1

புரசை மதக் கரிகளொடு புரவி ஏறும் பொற்புடைய வீதிகளும் பொலிய எங்கும்
1177-2
விரை செய் நறும் தொடை அலங்கல் குமரர் செய்யும் வியப்புறு செய் தொழில் கண்டு விஞ்சை
விண்ணோர் 1177-3
நிரை செறியும் விமான ஊர்திகளின் மேலும் நிலமிசையும் பல முறையும் நிரந்து நீங்கார்
1177-4

101. வெயில் உமிழும் பன்மணிப் பூண் வணிக மாக்கள் விரவு நிதி வளம் பெருக்கும் வெறுக்கை
மிக்க 1178-1
வயின் நிலவு மணிக் கடை மா நகர்கள் எல்லாம் வனப்பு உடைய பொருள் குலங்கள் மலிதலாலே
1178-2
கயிலை மலையார் கச்சி ஆலயங்கள் பலவும் கம்பமுமேவிய தன்மை கண்டு போற்றப்
1178-3
பயிலும் உருப் பலவும் கொண்டு நிதிக் கோன் தங்கப் பயில் அளகாபுரி வகுத்த பரிசு காட்டும்
1178-4

102. விழவு மலி திருக் காஞ்சி வரைப்பின் வேளாண் விழுக் குடிமை பெரும் செல்வர் விளங்கும்
வேணி 1179-1
மழ இள வெண் திங்கள் புனை கம்பர் செம் பொன் மலைவல்லிக் களித் தவளர் உணவின் மூலம்
1179-2
தொழ உலகு பெறும் அவள் தான் அருள பெற்றுத் தொல் நிலத்து மன்னு பயிர் வேத வாய்மை
1179-3
உழவுத் தொழிலால் பெருக்கி உயிர்கள் எல்லாம் ஓங்க வரும் தரும வினைக்கு உளரால் என்றும்
1179-4

103. ஓங்கிய நால் குலத்து ஒவ்வாப் புணர்வில் தம்மில் உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆன சாதி
1180-1
தாம் குழுமிப் பிறந்த குல பேதம் எல்லாம் தம் தகைமைக்கு ஏற்ற தனி இடங்கள் மேவி
1180-2
ஆங்கு நிறை கிளை பயின்று மரபின் ஆற்ற அடுத்த வினைத் தொழிலின் முறைமை வழாமை நீடு
1180-3
பாங்கு வளர் இருக்கை நிலை பலவும் எல்லாம் பண்பு நீடிய உரிமைப் பால அன்றே
1180-4

104. ஆதி மூது எயில் அந் நகர் மன்னிய 1181-1
சோதி நீள் மணித் தூபமும் தீபமும் 1181-2
கோது இல் பல்லியமும் கொடியும் பயில் 1181-3
வீதி நாளும் ஒழியா விழா வணி 1181-4

105. வாயில் எங்கணும் தோரணம் மாமதில் 1182-1
ஞாயில் எங்கணும் சூழ் முகில் நாள்மதி 1182-2
தோயில் எங்கணும் மங்கலம் தொண்டர் சூழ் 1182-3
கோயில் எங்கணும் உம்பர் குலக் குழாம் 1182-4

106. வேத வேதியர் வேள்வியே தீயன 1183-1
மாதர் ஓதி மலரே பிணியன 1183-2
காதல் வீதி விலக்கே கவலைய 1183-3
சூத மாதவியே புறம் சூழ்வன 1183-4

107. சாயலார்கள் நுசுப்பே தளர்வன 1184-1
ஆய மாடக் கொடியே அசைவன 1184-2
சேய ஓடைக் களிறே திகைப்பன 1184-3
பாய சோலைத் தருவே பயத்தன 1184-4

108. அண்ணலார் அன்பர் அன்பே முன் ஆர்த்தன 1185-1
தன் நறும் செழுந்தாதே துகள்வன 1185-2
வண்ண நீள் மணி மாலையே தாழ்வன 1185-3
எண் இல் குங்குமச் சேறே இழுக்கின 1185-4

109. வென்றி வானவர் தாம் விளையாடலும் 1186-1
என்றும் உள்ளவர் வாழும் இயற்கையும் 1186-2
நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள் 1186-3
ஒன்றும் அங்கு ஒழியா வகை உய்ப்பது 1186-4

110. புரம் கடந்தவர் காஞ்சி புரம் புகழ் 1187-1
பரம்பு நீள் புவனம் பதி நான்கினும் 1187-2
வரம்பு இல் போக வனப்பின் வளமெல்லாம் 1187-3
நிரம்பு கொள்கலம் என்ன நிறைந்தலால் 1187-4

111. அவ்வகைய திருநகரம் அதன் கண் ஒரு மருங்கு உறைவார் 1188-1
இவ் உலகில் பிறப்பினால் ஏகாலிக் குலத்து உள்ளார் 1188-2
செவ்விய அன்பு உடை மனத்தார் சீலத்தின் நெறி நின்றார் 1188-3
மை விரவு கண்டர் அடி வழித் தொண்டர் உளர் ஆனார் 1188-4

112. மண்ணின் மிசை வந்த அதற்பின் மனம் முதல் ஆயின மூன்றும் 1189-1
அண்ணலார் சே அடியின் சார்வு ஆக அணைவிப்பார் 1189-2
புண்ணிய மெய்த் தொண்டர் திருக் குறிப்பு அறிந்து போற்று நிலைத் 1189-3
திண்மையினால் திருக் குறிப்புத் தொண்டர் எனும் சிறப்பினார் 1189-4

113. தேர் ஒலிக்க மா ஒலிக்கத் திசை ஒலிக்கும் புகழ்க் காஞ்சி 1190-1
ஊர் ஒலிக்கும் பெரு வண்ணார் என ஒண்ணா உண்மையினார் 1190-2
நீர் ஒலிக்க அரா இரைக்க நிலா முகிழ்க்கும் திருமுடியார் 1190-3
பேர் ஒலிக்க உருகும் அவர்க்கு ஒலிப்பர் பெரு விருப்பி னொடும் 1190-4

114. தேசு உடைய மலர்க் கமலச் சேவடியார் அடியார்தம் 1191-1
தூசு உடைய துகள் மாசு கழிப்பார் போல் தொல்லை வினை 1191-2
ஆசு உடைய மலம் மூன்றும் அணைய வரும் பெரும் பிறவி 1191-3
மாசு தனை விடக் கழித்து வரும் நாளில் அங்கு ஒரு நாள் 1191-4

115. பொன் இமயப் பொருப் பரையன் பயந்து அருளும் பூம் கொடி தன் 1192-1
நல் நிலைமை அன்று அளக்க எழுந்து அருளும் நம் பெருமான் 1192-2
தன் உடைய அடியவர் தம் தனித் தொண்டர் தம் உடைய 1192-3
அந் நிலைமை கண்டு அன்பர்க்கு அருள் புரிவான் வந்து அணைவார் 1192-4

116. சீதம் மலி காலத்துத் திருக் குறிப்புத் தொண்டர்பால் 1193-1
ஆதுலர் ஆய் மெலிந்து மிக அழுக்கு அடைந்த கந்தையுடன் 1193-2
மா தவ வேடம் தாங்கி மால் அறியா மலர் அடிகள் 1193-3
கோது அடையா மனத்தவர் முன் குறு நடைகள் கொளக் குறுகி 1193-4

117. திருமேனி வெண் நீறு திகழ்ந்து ஒளிரும் கோலத்துக் 1194-1
கரு மேகம் என அழுக்குக் கந்தையுடன் எழுந்து அருளி 1194-2
வருமேனி அருந் தவரைக் கண்டு மனம் மகிழ்ந்து எதிர் கொண்டு 1194-3
உருமேவும் மயிர்ப் புளகம் உளவாகப் பணிந்து எழுந்தார் 1194-4

118. எய்தும் அவர் குறிப்பு அறிந்தே இன் மொழிகள் பல மொழிந்து 1195-1
செய் தவத்தீர் திருமேனி இளைத்து இருந்தது என் என்று 1195-2

கை தொழுது கந்தையினைத் தந்து அருளும் கழுவ என 1195-3
மை திகழ் கண்டம் கரந்த மாதவத்தோர் அருள் செய்வார் 1195-4

119. இக் கந்தை அழுக்கு ஏறி எடுக்க ஒணாது எனினும் யான் 1196-1
மெய்க் கொண்ட குளிர்க் குடைந்து விட மாட்டேன் மேல் கடல் பால் 1196-2
அக் குன்றம் வெம் கதிரோன் அணைவதன் முன் தருவீர் ஏல் 1196-3
கைக் கொண்டு போய் ஒலித்துக் கொடுவாரும் கடிது என்றார் 1196-4

120. தந்து அருளும் இக் கந்தை தாழாதே ஒலித்து உமக்கு இன்று 1197-1
அந்தி படுவதன் முன்னம் தருகின்றேன் என அவரும் 1197-2
கந்தை இது ஒலித்து உணக்கிக் கடிது இன்றே தாரீரேல் 1197-3
இந்த உடற்கு இடர் செய்தீர் என்று கொடுத்து ஏகினார் 1197-4

121. குறித்த பொழுதே ஒலித்துக் கொடுப்பதற்குக் கொடு போந்து 1198-1
வெறித் தடநீர்த் துறையின் கண் மா செறிந்து மிகப் புழுக்கிப் 1198-2
பிறித்து ஒலிக்கப் புகும் அளவில் பெரும் பகல் போய்ப் பின்பகலாய் 1198-3
மறிக்கரத்தார் திரு அருளால் மழை எழுந்து பொழிந்திம் ஆல் 1198-4

122. திசை மயங்க வெளி அடைத்த செறி முகிலின் குழாம் மிடைந்து 1199-1
மிசை சொரியும் புனல் தாரை விழி நுழையா வகை மிடைய 1199-2
அசைவு உடைய மனத்து அன்பர் அறிவு மறந்து அருந்தவர் பால் 1199-3
இசைவு நினைந்து அழிந்து இனி யான் என் செய்கேன் என நின்றார் 1199-4

123. ஓவாதே பொழியும் மழை ஒரு கால் விட்டு ஒழியும் எனக் 1200-1
காவாலி திருத் தொண்டர் தனி நின்றார் விடக் காணார் 1200-2
மேவார் போல் கங்குல் வர மெய் குளிரும் விழுந்தவர் பால் 1200-3
ஆ ஆ என் குற்றேவல் அழிந்த வா என விழுந்தார் 1200-4

124. விழுந்த மழை ஒழியாது மெய்த்தவர் சொல்லிய எல்லை 1201-1
கழிந்தது முன்பு ஒலித்து மனைக்கு ஆற்று ஏற்க அறிந்திலேன் 1201-2
செழும் தவர் தம் திருமேனி குளிர் கணும் தீங்கு இழைத்த 1201-3
தொழும்பனேற்கு இனி இதுவே செயல் என்று துணிந்து எழுவார் 1201-4

125. கந்தை புடைத்திட எற்றும் கல்பாறை மிசைத் தலையைச் 1202-1
சிந்த எடுத்து எற்றுவான் என்று அணைந்து செழும் பாறை மிசைத் 1202-2
தன் தலையைப் புடைத்து எற்ற அப்பாறை தன் மருங்கு 1202-3
வந்து எழுந்து பிடித்தது அணி வளைத் தழும்பர் மலர்ச் செங்கை 1202-4

126. வான் நிறைந்த புனல் மழை போய் மலர் மழையாய் இட மருங்கு 1203-1
தேன் நிறைந்த மலர் இதழித் திருமுடியார் பொருவிடையின் 1203-2
மேல் நிறைந்த துணைவி யொடும் வெளி நின்றார் மெய்த் தொண்டர் 1203-3
தான் நிறைந்த அன்பு உருகக் கை தொழுது தனி நின்றார் 1203-4

127. முன் அவரை நேர் நோக்கி முக் கண்ணர் மூவுலகும் 1204-1
நின் நிலைமை அறிவித்தோம் நீயும் இனி நீடிய நம் 1204-2
மன் உலகு பிரியாது வைகுவாய் என அருளி 1204-3
அந் நிலையே எழுந்து அருளி அணி ஏகாம்பரம் அணைந்தார் 1204-4

128. சீர் நிலவு திருக் குறிப்புத் தொண்டர் திருத்தொழில் போற்றிப் 1205-1
பார் குலவத் தந்தை தாள் அற எறிந்தார் பரிசு உரைக்கேன் 1205-2
பேர் அருளின் மெய்த் தொண்டர் பித்தன் எனப் பிதற்றுதலால் 1205-3
ஆர் உலகில் இதன் உண்மை அறிந்து உரைக்க இசைந்து எழுவார் 1205-4

## 20 சண்டேசுர நாயனார் புராணம்

1. பூம் தண் பொன்னி எந் நாளும் பொய்யாது அளிக்கும் புனல் நாட்டு 1206-1
வாய்ந்த மண்ணித் தென் கரையில் மன்ன முன் நாள் வரை கிழிய 1206-2
ஏந்தும் அயில் வேல் நிலை காட்டி இமையோர் இகல் வெம் படை காக்கும் 1206-3

சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞ்லூர் 1206-4

2. செம்மை வெண் நீற்று ஒருமையினார் இரண்டு பிறப்பின் சிறப்பினார் 1207-1
மும்மைத் தழல் ஓம்பிய நெறியார் நான்கு வேதம் முறை பயின்றார் 1207-2
தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகையார் அறுதொழிலின் 1207-3
மெய்ம்மை ஒழுக்கம் ஏழு உலகும் போற்றும் மறையோர் விளங்குவது 1207-4

3. கோது இல் மான் தோல் புரி முந்நூல் குலவு மார்பில் குழைக் குடுமி 1208-1
ஓது புடை சூழ் சிறுவர்களும் உதவும் பெருமை ஆசானும் 1208-2
போதின் விளங்கும் தாரகையும் மதியும் போலப் புணர் மாடங்கள் 1208-3
மீது முழங்கு முகில் ஒதுங்க வேத ஒலிகள் முழங்குவன 1208-4

4. யாகம் நிலவும் சாலை தொறும் மறையோர் ஈந்த அவி உணவின் 1209-1
பாகம் நுகர வரும் மாலும் அயனும் ஊரும் படர் சிறைப்புள் 1209-2
மாகம் இகந்து வந்து இருக்கும் சேக்கை எனவும் வானவர் கோன் 1209-3
நாகம் அணையும் கந்து எனவும் நாட்டும் யூப ஈட்டம் உள 1209-4

5. தீம் பால் ஒழுகப் பொழுது தொறும் ஓம தேனுச் செல்வனவும் 1210-1
தாம் பாடிய சாமம் கணிப்போர் சமிதை இடம் கொண்டு அனைவனவும் 1210-2
பூம் பாசடை நீர் நீர்த் தடம் மூழ்கி மறையோர் மகளிர் புகுவனவும் 1210-3
ஆம் பான்மையினில் விளங்குவன அணி நீள் மறுகு பலவும் உள 1210-4

6. வாழ் பொன் பதி மற்று அதன் மருங்கு மண்ணித் திரைகள் வயல் வரம்பின் 1211-1
தாழ்வு இல் தரளம் சொரி குலைப்பால் சமைத்த யாகத் தடம் சாலை 1211-2
சூழ் வைப்பு இடங்கள் நெருங்கி உள தொடங்கு சடங்கு முடித்து ஏறும் 1211-3
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணோர் ஏறும் விமானங்கள் 1211-4

7. மடையில் கழுநீர் செழுநீர் வயலில் சாலிக் கதிர்க்கற்றைப் 1212-1
புடையில் சுரும்பு மிடை கமுகு புனலில் பரம்பு பூம்பாளை 1212-2
அடையில் பயிலும் தாமரை நீள் அலரில் துயிலும் கயல்கள் வழி 1212-3
நடையில் படர்மென் கொடி மௌவல் நனையில் திகழும் சினைக் காஞ்சி 1212-4

8. சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திரு எல்லை 1213-1
பொன்னின் மயம் ஆக்கிய வளவர் போர் ஏறு என்றும் புவி காக்கும் 1213-2
மன்னர் பெருமான் அநபாயன் வரும் தொல் மரபின் முடி சூட்டும் 1213-3
தன்மை நிலவு பதி ஐந்தின் ஒன்றாய் நீடும் தகைத்தது அவ்வூர் 1213-4

9. பண்ணின் பயனாம் நல் இசையும் பாலி பயன் ஆம் இண் சுவையும் 1214-1
கண்ணின் பயன் ஆம் பெருகு ஒளியும் கருத்தின் பயனும் எழுத்து ஐந்தும் 1214-2
விண்ணின் பயன் ஆம் பொழி மழையும் வேதப் பயன் ஆம் சைவமும் போல் 1214-3
மண்ணின் பயன் ஆம் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்பு உடைத்தோ 1214-4

10. பெருமை பிறங்கும் அப்பதியின் மறையோர் தம் உள் பெருமனை வாழ் 1215-1
தருமம் நிலவு காசிய கோத்திரத்துத் தலைமை சால் மரபில் 1215-2
அருமை மணியும் அளித்து அதுவே நஞ்சும் அளிக்கும் அரவு போல் 1215-3
இருமை வினைக்கும் ஒரு வடிவு ஆம் எச்ச தத்தன் உளன் ஆனான் 1215-4

11. மற்றை மறையோன் திரு மனைவி வாய்ந்த மரபின் வந்து உதித்தாள் 1216-1
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் உலகில் துணைப் புதல்வர் 1216-2
பெற்று விளங்கும் தவம் செய்தாள் பெறும் பேறு எல்லைப் பயன் பெறுவாள் 1216-3
பற்றை எறியும் பற்றுவார் சார்பாய் உள்ள பவித்திரையாம் 1216-4

12. நன்றி புரியும் அவர் தம் பால் நன்மை மறையின் துறை விளங்க 1217-1
என்றும் மறையோர் குலம் பெருக ஏழு புவனங்களும் உய்ய 1217-2
மன்றில் நடம் செய்பவர் சைவ வாய்மை வளர மா தவத்தோர் 1217-3
வென்றி குளங்க வந்து உதயம் செய்தார் விசார சருமனார் 1217-4

13. ஐந்து வருடம் அவர்க்கு அணைய அங்கம் ஆறும் உடன் நிறைந்த 1218-1

சந்த மறைகள் உட்பட முன் தலைவர் மொழிந்த ஆகமங்கள் 1218-2
முந்தை அறிவின் தொடர்ச்சியினால் முகைக்கு மலரின் வாசம் போல் 1218-3
சிந்தை மலர உடன் மலரும் செவ்வி உணர்வு சிறந்தது ஆல் 1218-4

14. நிகழும் முறைமை ஆண்டு ஏழும் நிரம்பும் பருவம் வந்து எய்தப் 1219-1
புகழும் பெருமை உப நயனப் பொருவில் சடங்கு முடித்து அறிவின் 1219-2
இகழு நெறிய அல்லாத எல்லாம் இயந்த எனினும் தம் 1219-3
திகழும் மரபின் ஓது விக்கும் செய்கை பயந்தார் செய்வித்தார் 1219-4

15. குலவு மறையும் பல கலையும் கொளுத்துவதன் முன் கொண்டு அமைந்த 1220-1
நிலவும் உணர்வின் திறம் கண்டு நிறுவும் மறையோர் அதிசயித்தார் 1220-2
அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடும் கழலே எனக் கொண்ட 1220-3
செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார் சிறிய பெரும் தகையார் 1220-4

16. நடமே புரியும் சேவடியார் நம்மை உடையார் என்றும் மெய்ம்மை 1221-1
உடனே தோன்றும் உணர்வின் கண் ஒழியாது ஊறும் வழி அன்பின் 1221-2
கடனே இயல்பாய் முயற்றி வரும் காதல் மேல்மேல் எழும் கருத்தின் 1221-3
திடம் நேர் நிற்கும் செம்மலார் திகழும் நாளில் ஆங்கு ஒரு நாள் 1221-4

17. ஓது கிடையின் உடன் போவார் ஊர் ஆன் நிரையின் உடன் புக்க 1222-1
போது மற்று அங்கு ஒரு புனிற்றா போற்றும் அவன் மேல் மருப்பு ஓச்ச 1222-2
யாதும் ஒன்றும் கூசாதே எடுத்த கோல் கொண்டு அவன் புடைப்ப 1222-3
மீது சென்று மிகும் பரிவால் வெகுண்டு விலக்கி மெய் உணர்ந்து 1222-4

18. பாவும் கலைகள் ஆகமநூல் பரப்பின் தொகுதிப் பான்மையினால் 1223-1
மேவும் பெருமை அரு மறைகள் மூலம் ஆக விளங்கு உலகில் யாவும் 1223-2
தெளிந்த பொருள் நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால் 1223-3
ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற்கு அருள் செய்வார் 1223-4

19. தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன 1224-1
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன 1224-2
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத 1224-3
அங்கம் அனைத்தும் தாம் உடைய அல்லவோ நல் ஆ இனங்கள் 1224-4

20. ஆய சிறப்பினால் பெற்ற அன்றே மன்றுள் நடம் புரியும் 1225-1
நாயனார்க்கு வளர் மதியும் நதியும் நகு வெண் தலைத் தொடையும் 1225-2
மேய வேணித் திரு முடிமேல் விரும்பி ஆடி அருளுதற்குத் 1225-3
தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள் தாம் 1225-4

21. சீலம் உடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத் தேவருடன் 1226-1
காலம் முழுதும் உலகனைத்தும் காக்கும் முதல் காரணர் ஆகும் 1226-2
நீலகண்டர் செய்ய சடை நிறுத்தர் சாத்து நீறுதரும் 1226-3
மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் என்றால் முடிவு என்னோ 1226-4

22. உள்ளும் தகைமை இனிப் பிறவே வேறு உளவே உழை மான் மறக் கன்று 1227-1
துள்ளும் கரத்தார் அணி பணியின் சுடர் சூழ் மணிகள் சுரநதி நீர் 1227-2
தெள்ளும் சடையார் தேவர்கள் தம்பிராட்டி உடனே சேரமிசைக் 1227-3
கொள்ளும் சின மால் விடைத் தேவர் குலம் அன்றோ இச் சுரபி குலம் 1227-4

23. என்று இன்னனவே பலவும் நினைந்து இதத்தின் வழியே மேய்த்து இந்தக் 1228-1
கன்று பயில் ஆன் நிரை காக்கும் இதன் மேல் இல்லை கடன் இதுவே 1228-2
மன்றுள் ஆடும் சேவடிகள் வழுத்து நெறியாவதும் என்று 1228-3
நின்ற ஆயன் தனை நோக்கி நிரை மேய்ப்பு ஒழிக நீ என்பார் 1228-4

24. யானே இனி இந்நிரை மேய்ப்பன் என்றார் அஞ்சி இடை மகனும் 1229-1
தான் ஏர் இறைஞ்சி விட்டு அகன்றான் தாமும் மறையோர் இசைவினால் 1229-2
ஆனே நெருங்கும் பேர் ஆயம் அளிப்பார் ஆகிப் பைம் கூழுக்கு 1229-3
வானே என்ன நிரை காக்க வந்தார் தெய்வ மறைச் சிறுவர் 1229-4

25. கோலும் கயிறும் கொண்டு குழைக் குடுமி அலையக் குலவு மான் 1230-1
தோலும் நூலும் சிறு மார்பில் துவள அரைக் கோவணம் சுடரப் 1230-2
பாலும் பயனும் பெருக வரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினால் 1230-3
சாலும் புல்லின் அவை வேண்டும் தனையும் மிசையும் தலைச் சென்று 1230-4

26. பதவு காலங்களில் மேய்த்தும் பறித்தும் அளித்தும் பரிவு அகற்றி 1231-1
இதம் உண் துறையுள் நல் தண்ணீர் ஊட்டி அச்சம் எதிர் நீக்கி 1231-2
அதர் நல்லன முன் செல நீழல் அமர் வித்து அமுத மதுரப்பால் 1231-3
உதவும் பொழுது பிழையாமல் உடையோர் இல்லம் தொறும் உய்த்தார் 1231-4

27. மண்ணிக் கரையின் வளர் புறவின் மாடும் படுகர் மருங்கினிலும் 1232-1
தண் நித்தில நீர் மருதத் தண்தலை சூழ் குலையின் சார்பினிலும் 1232-2
எணில் பெருகு நிரை மேய்த்துச் சமிதை உடன் மேல் ஏரிகொண்டு 1232-3
நண்ணில் கங்குல் முன் புகுந்தும் நல் நாள் பலவாம் அந் நாளில் 1232-4

28. ஆய நிரையின் குலம் எல்லாம் அழகின் விளங்கி மிகப் பல்கி 1233-1
மேய இனிய புல் உணவும் விரும்பு புனலும் ஆர்தலினால் 1233-2
ஏய மனம் கொள் பெரு மகிழ்ச்சி எய்தி இரவும் நண்பகலும் 1233-3
தூய தீம் பால் மட பெருகிச் சொரிய முலைகள் சொரிந்தன ஆல் 1233-4

29. பூணும் தொழில் வேள்விச் சடங்கு புரிய ஓம தேனுக்கள் 1234-1
காணும் பொலிவின் முன்னையினும் அனேக மடங்கு கறப்பன ஆய் 1234-2
பேணும் தகுதி அன்பால் இப் பிரம சாரி மேய்த்த அதற்பின் 1234-3
மாணும் திறத்த ஆன என மறையோர் எல்லாம் மனம் மகிழ்ந்தார் 1234-4

30. அனைத்துத் திறத்தும் ஆன் இனங்கள் அணைந்த மகிழ்ச்சி அளவு இன்றி 1235-1
மனைக் கண் கன்று பிரிந்தாலும் மருவும் சிறிய மறைக் கன்று 1235-2
தனைக் கண்டு அருகு சார்ந்து உருகித் தாய் ஆம் தன்மை நிலைமையவாய்க் 1235-3
கணைத்துச் சுரந்து முலைக் கண்கள் கறவாமே பால் பொழிந்தன ஆல் 1235-4

31. தம்மை அணைந்த ஆன் முலைப்பால் தாமே பொழியக் கண்டு வந்து 1236-1
செம்மை நெறியே உறுமனத்தில் திரு மஞ்சனமாம் குறிப்பு உணர்ந்தே 1236-2
எம்மை உடைய வள்ளலார் எய்த நினைந்து தெளிந்து அதனில் 1236-3
மெய்மைச் சிவனார் பூசனையை விரும்பும் வேட்கை விரைந்து எழலும் 1236-4

32. அம் கண் முன்னை அர்ச்சனையின் அளவின் தொடர்ச்சி விளையாட்டாப் 1237-1
பொங்கும் அன்பால் மண்ணில் மணல் புளினக் குறையில் ஆத்தியின் கீழ்ச் 1237-2
செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவ ஆலயமும் 1237-3
துங்க நீடு கோபுரமும் சுற்று ஆலயமும் வகுத்து அமைத்தார் 1237-4

33. ஆத்தி மலரும் செழுந்தளிரும் முதலா அருகு வளர் புறவில் 1238-1
பூத்த மலர்கள் தாம் தெரிந்து புனிதர் சடிலத் திரு முடிமேல் 1238-2
சாத்தல் ஆகும் திருப் பள்ளித் தாமம் பலவும் தாம் கொய்து 1238-3
கோத்த இலைப் பூம் கூடையினில் கொணர்ந்து மணம் தங்கிட வைத்தார் 1238-4

34. நல்ல ஆகும் நவ கும்பங்கள் பெற நாடிக் கொண்டு நாணல் பூம் 1239-1
கொல்லை இடத்தும் குறை மறைவும் மேவும் கோக்கள் உடன் கூட 1239-2
ஒல்லை அணைந்து பால் ஆக்கள் ஒன்றுக்கு ஒரு கால் ஆக எதிர் 1239-3
செல்ல அவையும் கனைத்து முலை தீண்டச் செழும் தீம் பால் பொழிந்தன ஆல் 1239-4

35. கொண்ட மடுத்த குடம் நிறையக் கொணர்ந்து விரும்பும் கொள்கையினால் 1240-1
அண்டர் பெருமான் வெண்மணல் ஆலயத்துள் அவை முன் தாபித்து 1240-2
வண்டு மருவும் திருப் பள்ளித் தாமம் கொண்டு வரன் முறையே 1240-3
பண்டைப் பரிவால் அருச்சித்துப் பாலின் திரு மஞ்சனம் ஆட்டி 1240-4

36. மீள மீள இவ் வண்ணம் வெண் பால் சொரி மஞ்சனம் ஆட்ட ஆள் உடையார் 1241-1
தம் உடைய அன்பர் அன்பின்பால் உளதாய் மூள அமர்ந்த 1241-2
நயப் பாடு முதிர்ந்த பற்று முற்றச் சூழ் 1241-3
கோளம் அதனில் உள் நிறைந்து குறித்த பூசை கொள்கின்றார் 1241-4

37. பெருமை பிறங்கும் சேய்ஞலூர் பிள்ளையார் உள்ளத்தில் 1242-1
ஒருமை நினைவால் உம்பர்பிரான் உவக்கும் பூசை உறுப்பான 1242-2
திரு மஞ்சனமே முதல் அவற்றில் தேடாதன அன்பினில் நிரம்பி 1242-3
வரும் அந் நெறியே அர்ச்சனை செய்து அருளி வணங்கி மகிழ்கின்றார் 1242-4

38. இறையோன் அடிக் கீழ் மறையவனார் எடுத்துத் திருமஞ்சனம் ஆட்டும் 1243-1
நிறை பூசனைக்குக் குடங்கள் பால் நிரம்பச் சொரிந்து நிரைக் குலங்கள் 1243-2
குறைபாடு இன்றி மடி பெருகக் குவிந்த முலைப்பால் குறைவு இன்றி 1243-3
மறையோர் மனையின் முன்பு தரும் வளங்கள் பொலிய வைகுமால் 1243-4

39. செயல் இப்படியே பல நாளும் சிறந்த பூசை செய்வதற்கு 1244-1
முயல் உற்று அதுவே திருவிளையாட்டு ஆக முந்நூல் அணிமார்பர் 1244-2
இயல்பில் புரியும் மற்று இதனைக் கண்டித் திறத்தை அறியாத 1244-3
அயல் மற்று ஒருவன் அப் பதியில் அந்தண் ஆளர்க்கு அறிவித்தான் 1244-4

40. அச் சொல் கேட்ட அருமறையோர் ஆயன் அறியான் என்று அவற்றின் 1245-1
இச்சை வழியே யான் மேய்ப்பேன் என்று எம் பசுக்கள் தமைக் கறந்து 1245-2
பொச்சம் ஒழுகு மாணவகன் பொல்லாங்கு உரைக்க அவன் தாதை 1245-3
எச்ச தத்தன் தனை அழைமின் என்றார் அவையில் இருந்தார்கள் 1245-4

41. ஆங்கு மருங்கு நின்றார்கள் அவ் அந்தணன் தன் திருமனையின் 1246-1
பாங்கு சென்று மற்று அவனை அழைத்துக் கொண்டு வரப் பரந்த 1246-2
ஓங்கு சபையோர் அவனைப் பார்த்து ஊர் ஆனிரை மேய்த்து உன் மகன் செய் 1246-3
தீங்கு தன்னைக் கேள் என்று புகுந்த பரிசு செப்புவார் 1246-4

42. அம் தண் மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்கள் ஆன எலாம் 1247-1
சிந்தை மகிழ்ந்து பரிவினால் திரளக் கொடுபோய் மேய்பான் போல் 1247-2
கந்தம் மலியூம் புனல் மண்ணி மணலில் கறந்து பால் உகுத்து 1247-3
வந்த பரிசே செய்கின்றான் என்றான் என்று வாய் மொழிந்தார் 1247-4

43. மறையோர் மொழியக் கேட்டு அஞ்சி சிறு மாணவகன் செய்த இது 1248-1
இறையும் நான் முன் பறிந்திலேன் இதற்கு முன்பு புகுந்து அதனை 1248-2
நிறையும் பெருமை அந்தணர்காள் பொறுக்க வேண்டும் நீங்கள் 1248-3
எனக் குறை கொண்டு இறைஞ்சி இனிப் புகுதில் குற்றம் எனதேயாம் என்றான் 1248-4

44. அம் தண் ஆளர் தமை விடை கொண்டு அந்தி தொழுது மனை புகுந்து 1249-1
வந்த பழி ஒன்று என நினைந்தே மகனார் தமக்கு வாய் நேரான் 1249-2
இந்த நிலைமை அறிவேன் என்று இரவு கழிந்து நிரை மேய்க்க 1249-3
மைந்தனார் தாம் போயின பின் மறைந்து சென்றான் மறை முதியோன் 1249-4

45. சென்ற மறையோன் திருமகனார் சிறந்த ஊர் ஆன் நிரை கொடு போய் 1250-1
மன்றல் மருவும் புறவின் கண் மேய்ப்பார் மண்ணி மணல் குறையில் 1250-2
அன்று திரளக் கொடு சென்ற அதனை அறிந்து மறைந்த பால் 1250-3
நின்ற குரவின் மிசை ஏறி நிகழ்வது அறிய ஒளித்து இருந்தான் 1250-4

46. அன்பு புரியும் பிரம சாரிகளும் மூழ்கி அரனார்க்கு 1251-1
முன்பு போல மணல் கோயில் ஆக்கி முகை மென் மலர் கொய்து 1251-2
பின்பு வரும் ஆன் முலை பொழிபால் பெருகும் குடங்கள் பேணும் இடம் 1251-3
தன்பால் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டுவன சமைத்தார் 1251-4

47. நின்ற விதியின் விளையாட்டால் நிறைந்த அரும் பூசனை தொடங்கி 1252-1
ஒன்றும் உள்ளத்து உண்மையினால் உடைய நாதன் திரு முடிமேல் 1252-2
மன்றல் விரவும் திருப் பள்ளித் தாமம் சாத்தி மஞ்சனம் ஆம் 1252-3
நன்று நிறை தீம் பால் குடங்கள் எடுத்து நயப்பு உற்று ஆட்டுதலும் 1252-4

48. பரவ மேல் மேல் எழும் பரிவும் பழைய பான்மை மிகும் பண்பும் 1253-1
விரவ மேதக்கவர் பால் மேவும் பெருமை வெளிப் படுப்பான் 1253-2
அரவம் மேவும் சடைமுடியார் அருள் ஆம் என்ன அறிவு அழிந்து 1253-3
குரவம் மேவும் முது மறையோன் கோபம் மேவும் படி கண்டான் 1253-4

49. கண்ட போதே விரைந்து இழிந்து கடிது சென்று கைத் தண்டு 1254-1
கொண்டு மகனார் திரு முதுகில் புடைத்துக் கொடிதாம் மொழி கூறத் 1254-2
தொண்டு புரியும் சிறிய பெரும் தொன்றலார் தம் பெருமான் மேல் 1254-3
மண்டு காதல் அருச்சனையின் வைத்தார் மற்று ஒன்று அறிந்திலர் ஆல் 1254-4

50. மேல் ஆம் பெரியோர் பலகாலும் வெகுண்டோன் அடிக்க வேறு உணரார் 1255-1
பாலர் திருமஞ்சனம் ஆட்டும் பணியில் சலியாதது கண்டு 1255-2
மாலா மறையோன் மிகச் செயிர்த்து வைத்த திருமஞ்சனக் குடப்பால் 1255-3
காலால் இடறிச் சிந்தினான் கையால் கடமைத் தலை நின்றான் 1255-4

51. சிந்தும் பொழுதில் அது நோக்கும் சிறுவர் இறை இல் தீயோனைத் 1256-1
தந்தை எனவே அறிந்தவன் தன் தாள்கள் சிந்தும் தகுதியினால் 1256-2
முந்தை மருங்கு கிடந்த கோல் எடுத்தார்க்கு அதுவே முறைமை யினால் 1256-3
வந்து மழுவய் இட எறிந்தார் மண் மேல் வீழ்ந்தான் மறையோனும் 1256-4

52. எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூறு அகற்றும் படையாக 1257-1
மறிந்த தாதை இருதாளும் துணித்த மைந்தர் பூசனையில் 1257-2
அறிந்த இடையூறு அகற்றினர் ஆய் முன் போல் அருச்சித்து இடப்புகலும் 1257-3
செறிந்த சடை நீள் முடியாரும் தேவியோடும் விடை ஏறி 1257-4

53. பூத கணங்கள் புடை சூழப் புராண முனிவர் புத்தேளிர் 1258-1
வேத மொழிகள் எடுத்து ஏத்த விமல மூர்த்தி திரு உள்ளம் 1258-2
காதல் கூர வெளிப் படலும் கண்டு தொழுது மனம் களித்துப் 1258-3
பாத மலர்கள் மேல் விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகன் ஆர் 1258-4

54. தொடுத்த இதழி சூழ் சடையார் துணைத் தாள் நிழல் கீழ் விழுந்தவரை 1259-1
எடுத்து நோக்கி நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய் 1259-2
அடுத்த தாதை இனி உனக்கு நாம் என்று அருள் செய்து அணைத்து அருளி 1259-3
மடுத்த கருணையால் தடவி உச்சி மோந்து மகிழ்ந்து அருள 1259-4

55. செம் கண் விடையார் திரு மலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனார் 1260-1
அம் கண் மாயை யாக்கையின் மேல் அளவு இன்று உயர்ந்த சிவமயமாய் 1260-2
பொங்கி எழுந்த திரு அருளின் மூழ்கிப் பூ மேல் அயன் முதல் ஆம் 1260-3
துங்க அமரர் துதி செய்யச் சூழ்ந்த ஒளியில் தோன்றினார் 1260-4

56. அண்டர் பிரானும் தொண்டர் தமக்கு அதிபன் ஆக்கி அனைத்து நாம் 1261-1
உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் 1261-2
சண்டீசனும் ஆம் பதம் தந்தோம் என்று அங்கு அவர் பொன் தட முடிக்குத் 1261-3
துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார் 1261-4

57. எல்லா உலகும் ஆர்ப்பு எடுப்ப எங்கும் மலர் மாரிகள் பொழியப் 1262-1
பல்லாயிரவர் கண நாதர் படி ஆடிக் களி பயிலச் 1262-2
சொல்லார் மறைகள் துதி செய்யச் சூழ் பல் இயங்கள் எழச் சைவ 1262-3
நல் ஆறு ஓங்க நாயகம் ஆம் நங்கள் பெருமான் தொழுது அணைந்தார் 1262-4

58. ஞாலம் அறியப் பிழை புரிந்து நம்பர் அருளால் நால் மறையின் 1263-1
சீலம் திகழும் சேய்ஞ்லூர்ப் பிள்ளையார் தம் திருக்கையில் 1263-2

கோல மழுவால் ஏறு உண்டு குற்றம் நீங்கிச் சுற்றம் உடன் 1263-3
மூல முதல்வர் சிவ லோகம் எய்தப் பெற்றான் முது மறையோன் 1263-4

59. வந்து மிகை செய் தாதை தாள் மழுவால் துணித்த மறைச் சிறுவர் 1264-1
அந்த உடம்பு தன் உடனே அரனார் மகனார் ஆயினார் 1264-2
இந்த நிலைமை அறிந்தார் ஆர் ஈறு இலாதார் தமக்கு அன்பு 1264-3
தந்த அடியார் செய்தனவே தவம் ஆம் அன்றோ சாற்றும் கால் 1264-4

சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி
1. நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணி கண்டத்து 1265-1
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத் 1265-2
தேசம் உய்யத் திருத் தொண்டத் தொகை முன் பணித்த திருவாளன் 1265-3
வாச மலர் மென் கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம் 1265-4

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page